விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 வைகாசி 05 சனிக்கிழமை (19.05.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 151

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
(3940)
Satstech Engineers
28, Stanley Road,
Jaffna. 021 222 8812



# கண்ணீரில் நனைந்தது முள்ளிவாய்க்கால்

## அரசியல் கலப்பின்றி நினைவேந்தல் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்) தமிழ்த் தேசிய துக்க நாளான முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் எந்தவித அரசியல் கலப்புமின்றி உணர்வு பூர்வமாக நேற்று அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் ஒன்று திரண்டு, கொல்லப்பட்ட உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தியதில் முள்ளிவாய்க்கால் முற்றமே கண்ணீரில் நனைந்தது.

(24-ம் பக்கம் பார்க்க...)

## கொல்லப்பட்ட மக்களை நினைவுகூர வேண்டும்


### பிரதமர் ரணில்

(கொழும்பு)
போரில் உயிரிழந்த முப்படையினர் மட்டுமல்லாது பயங்கரவாதம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து கொல்லப்பட்ட அனைத்து அப்பாவி மக்களும் நினைவுகூரப்பட வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் 23☛

## சில்லில் காற்றுப் போனதால் கட்டுப்பாட்டையிழந்து பிக்கப் விபத்து

### பரந்தனில் சம்பவம்; ஒருவர் பலி



(யாழ்ப்பாணம்)
பரந்தன் பூநகரிக்கு இடையில் வடக்கு மாகாண திணைக்களத்தின் பிக்கப் வாகனம் 24☛

## முள்ளிவாய்க்கால் சென்றவர்களுக்கு மென்பானங்கள் வழங்கிய இராணுவம்



24☛

## தென்னிலங்கை இனவாதிகளால் புலிக்கொடிகளை எரித்து யுத்த வெற்றிக்கொண்டாட்டம்



(கொழும்பு)
இறுதி யுத்தத்தில் உயிரிழந்த உறவுகளை வடக்கு மக்கள் கண்ணீருடன் நினைவுகூர்ந்து வருகின்ற நிலையில், தெற்கில் சில இளைஞர்களின் செயற்பாடு மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

கிரிபத்கொட பகுதியை சேர்ந்த இளைஞர்கள் சிலர் யுத்த 02☛

## மீண்டும் வருவான் பிரபாகரன் ஓங்கி ஒலித்த தாயின் குரல்!

(முல்லைத்தீவு)
எங்கள் அண்ணன் பிரபாகரன் மீண்டும் வருவார்! 2020ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவரது ஆட்சி தொடர்ந்து நடக்கும் என முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்ட தாயொருவர் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு மௌனிக்கப்பட்ட தமிழர்களின் உரிமை கோரிய யுத்தத்தின் 9ஆம் வருட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்றைய தினம் வடக்கு கிழக்கு தாயக பகுதிகள் எங்கும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், யாழ். பல்கலைக் கழகத்தினரினதும், வடக்கு மாகாண சபையினதும் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் மண்ணில் 23☛

## என்னை உங்கள் பிள்ளையாய் நினையுங்கள்

### முள்ளிவாய்க்காலில் நெகிழ்ச்சி

(முல்லைத்தீவு)
தமிழினப் படுகொலையின் 9ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றைய தினம் தமிழர் தாயகப்பகுதிகளில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், முள்ளிவாய்க்காலில் அனுஷ்டிக்கப்பட்ட தமிழினபடுகொலையின் நினைவேந்தலில் மனதை உருக்கும் பல நெகிழ்ச்சியான சம்பவங்கள் நடந்தி 23☛

துரித தபால்கள் பொதிகள் சேவை
எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில்
11Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு

| | |
|---|---|
| UK | -550/= |
| Germany | -650/= |
| France | -700/= |
| Canada | -850/= |
| Australia | -800/= |

திருமுருகன் கொம் நெற்
கொழும்பு, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா.
Hotline -0777554528
(4125)

## சர்வதேசம் தனது மனச்சாட்சி கண்களை திறக்கும்

# தமிழ் இனப்படுகொலைக்கு நிச்சயம் ஒருநாள் நீதி கிடைக்கும்

### முள்ளிவாய்க்கால் முற்றத்தில் முதலமைச்சர் விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)
தமிழ் இனப்படுகொலைக்கு [illegible] கிடைக்கும். சர்வதேச சமூகம் தனது மனச்சாட்சிக் கண்களைத் திறக்கும் என முதலமைச்சர் 23☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அமைச்சர் ராஜிதவிற்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு

(கொழும்பு)

வட மாகாணத்தினுள் மே-18ஐ துக்க தினமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என கூறிய மாகாண கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன் மற்றும் அதனால் அரசாங்கத்திற்கு பிரச்சினை இல்லை எனக் கூறிய அமைச்சர் ராஜித சேனாரத்னவிற்கும் எதிராக பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி பிரமேநாத் சி.தொலவத்த உள்ளிட்ட பிரதிநிதிகள் குழு நேற்று இந்த முறைப்பாட்டை செய்துள்ளது.

அரசியலமைப்பை மீறிய இவர்கள் இருவருக்கு எதிராகவும் விரைவாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என அதன் ஊடாக கோரப்பட்டுள்ளது. (ம)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் யாழ்.சுதந்திரக்கட்சி அலுவலகத்தில்

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் 9ஆம் ஆண்டு நினைவேந்தல் அஞ்சலி சுதந்திர கட்சி அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வானது யாழ்ப்பாணம் கோவில் வீதி நல்லூரில் அமைந்திருக்கும் சுதந்திரக்கட்சி அலுவலகத்திலும் உணர்வு பூர்வமான முறையில் இடம்பெற்றிருந்தது.

இம்முறை யாழ்.மாவட்டத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் மாநகர மற்றும் நகர சபை பிரதேச சபை பிரதிநிதிகளும் அவர்களோடு இளைஞர் யுவதிகள் என பலரும் ஆத்ம அஞ்சலியில் உணர்வுபூர்வமான முறையில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# முள்ளிவாய்க்கால் நினைவுநாளில் அரச இணையத்தளங்கள் மீது ஊடுருவல்

(கொழும்பு)

ஒப்பரேசன் முள்ளிவாய்க்கால் என்கின்ற பெயரில் இரண்டாம் தடவையாக 300இற்கும் மேற்பட்ட இலங்கை அரச இணையத்தளங்கள் மீது சைபர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மே 18 தமிழின அழிப்பு நாளான நேற்று ஒப்பரேசன் முள்ளிவாய்க்கால் என்கின்ற பெயரில் இலங்கை தூதுவராலயங்கள் இணையத்தளங்கள், இலங்கை அரச நிர்வாக இணையங்கள் மற்றும் இலங்கை அரச செய்தி ஊடக இணையங்கள் உள்ளிட்ட 300இற்கும் மேற்பட்ட இணையத்தளங்கள் இவ்வாறு ஊடுருவப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முடக்கப்பட்ட குறித்த தளங்களில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைப் படங்களை பதிவேற்றியும் அதை தாம் மறக்க மாட்டோம் எனவும் செய்தி பதிவேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுபோல கடந்த 2017ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதியும் 200இற்கும் மேற்பட்ட இணையத்தளங்கள் இவ்வாறு முடக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவை ஆட்டம்காண வைத்துக் கொண்டிருக்கும் சைபர் தாக்குதல் இப்பொழுது மீண்டும் தமிழீழ விடுதலைப்புலிகள் என்கின்ற பெயரில் இலங்கை அரசையும் கதிகலங்க வைத்திருக்கின்றது என தற்போது இது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன.

மேலும், இலங்கை தூதுவராலய இணையங்களுக்குள் ஊடுருவப்பட்டிருப்பதால் பல்வேறுபட்ட ரகசியத் தகவல்கள் கசிந்திருக்கக் கூடும் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ம)

# போரில் உயிரிழந்த உறவுகளை நினைவுகூருவதை அரசால் தடுக்க முடியாது-அமைச்சர் வஜிர

இறந்தவர்கள் நினைவு கூரப்படுவது அரசாங்கத்தினால் தடுத்து நிறுத்தப்பட கூடிய ஒன்றல்ல எனவும் போரில் உயிரிழந்த படையினரை நினைவுகூருவது போல், வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் போரில் உயிரிழந்த தமது உறவினர்கள் மற்றும் நண்பர்களை நினைவு கூருகின்றனர் எனவும் அமைச்சர் வஜிர அபேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற மாவட்ட அரசாங்க அதிபர்கள் மாநாட்டின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இனங்களுக்கு இடையில் ஏற்படும் புரிந்துணர்வின்மையாக அவ்வப்போது உலகம் முழுவதும் பல்வேறு மோதல்கள் ஏற்படுகின்றன.

இலங்கையிலும் அப்படியான மோதல்கள் நடந்தன. 1971 ஆம் ஆண்டு புரட்சி ஏற்பட்டது. 88 ஆம் 89 ஆம் ஆண்டுகளில் மீண்டும் பிரச்சினைகள் ஏற்பட்டன. வடக்கு கிழக்கில் 30 ஆண்டுகள் போர் நடைபெற்றது. இவை அனைத்துக்கும் பின்னர் சமூகத்தில் ஏற்பட்ட காயங்களை குணப்படுத்துவது அவசியம். எனினும் தற்போது சிலர் இது குறித்து பல்வேறு கதைகளை கூறிவருகின்றனர் என்றார். (ம)

# புலிக்கொடிகளை...

வெற்றியை கொண்டாடும் முகமாக நேற்று வெள்ளிக்கிழமை இனவாதத்தை தூண்டும் வகையிலும், இலங்கையில் மௌனித்துப்போன விடுதலைப் புலிகளை மீண்டும் மக்களுக்கு நினைவூட்டும் வகையிலும் செயற்பட்டுள்ளனர்.

இவர்கள் தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பின் கொடிகளை ஏந்தியவாறு அனைவருக்கும் பாற்சோறு வழங்கி யுத்த வெற்றி கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் போது, தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பின் கொடிகளை குறித்த இளைஞர்கள் வீதியில் போட்டு காலால் மிதித்து, தீயிட்டு எரித்துள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகள் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு போராடிவருவோர் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


**மணிவிழா**

**நாயகனை வாழ்த்துகிறோம்**



**உயர்திரு.K.விமலநாதன்**
(உதவிக் கல்விப் பணிப்பாளர் முன்பள்ளி, யாழ் வலயம்.)

கல்வி என்ற கட்டிடத்தின்
கனதியான அத்திபாரம்
இட்டமைத்த இன்முகனே
முளை வித்து தான் அரும்பி
முழுத்தருவாய் தானோங்க
தரை தன்னைப் பதனிட்ட –நாதா
இனியொருவர் தொடமுடியா
நிறைபணியை நிகழ்த்திட்ட –விமலா
நீடு வாழ்க பல்லாண்டு.

மதுரம் கிட்ஸ் முன்பள்ளி
டச்சு வீதி, இருபாலை
கோப்பாய்.

வாழ்த்துவோர்:-
நிர்வாகத்தினர்,
அதிபர்,
ஆசிரியர்கள்,
மழலைகள்.

(சி-2645)

**கடை வாடகைக்கு உண்டு**

554B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு
அருகில் கடை வாடகைக்கு உண்டு.
மேற்குறித்த விலாசத்திற்கு நேரில்
வரவும்.
(4110)

**கார், வான் வாடகைக்கு தேவை**

கார்கள், வான்கள்
மாதாந்த
வாடகைக்கு தேவை.
071 040 4978
(4127)

**2ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு 01 - 05 - 1996



உதிர்வு 19 - 05 - 2016

**அமரர் இராசநாயகம் அஜந் (தங்கம்)**

அன்பின் பிறப்பிடமே ஆண்டு இரண்டு கடந்ததடா தங்கமே
தாய் தந்தை மகிழ்ந்திட தரணியில் உதித்தவனே தங்கமாக
தரணியோர் உளமகிழ்ந்து போற்றிட உதித்தவனே தங்கமாக
தன் வாழ்வுதனை மின்னல் வேகத்தில் மறைந்திட உதித்தவனோ–தங்கமாக
தங்கமயமான தேரினிலே இடையில் சென்றிட உதித்தனோ–தங்கமாக
யாவர்க்கும் இனியவனாய் இதய ஒளிபரப்பி வாழ்ந்த நல்லமனிதமே
விழி நனைய நெஞ்சம் நெகிழ்ந்து விடை தருகின்றோம்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(C-2647)

**முக்கிய குறிப்பு:** அமரர் இராசநாயகம் அஜந் அவர்களின் 2ஆம் ஆண்டு ஞாபகார்த்தமாக உதயசூரியன் விளையாட்டுக் கழக ஏற்பாட்டில் 20.05.2018 ஞாயிற்றுக்கிழமை 8.30 மணியளவில் குரும்பைகட்டி சனசமூக நிலையத்தில் இரத்ததான நிகழ்வு இடம்பெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

-உதயசூரியன் விளையாட்டுக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளின் கண்ணீரில் மூழ்கியது முள்ளிவாய்க்கால்





12 ஆம் பக்கம் பார்க்க...

## போரின் இறுதிக்கட்டத்தில்

# படையினரிடம் சரணடைந்தோர் பட்டியலை வெளியிட வேண்டும்

### முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு அனைத்துலக மன்னிப்புச் சபை அறிக்கை

(லண்டன்)


போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கைப் படையினரிடம் சரணடைந்தவர்களின் பட்டியலையும், அவர்கள் பற்றிய தகவலையும் வெளியிடுமாறு இலங்கை அரசாங்கத்திடம் அனைத்துலக மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது. இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட ஒன்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, அனைத்துலக மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்துள்ள அறிக்கையில், "சரணடைந்தவர்களின் பட்டியலை வெளியிடுமாறு தாம் பாதுகாப்புச் சபைக்கு உத்தரவிடுவதாக கடந்த 2017 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தார்.

தேசிய பாதுகாப்புச் சபையின் தலைவராக ஜனாதிபதியே இருக்கிறார். அவரே முப்படைகளின் தளபதி.

இருந்த போதும், அவர் வாக்குறுதி அளித்து 11 மாதங்களாகியும் போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்தவர்களின் பட்டியல் இன்னமும் வெளியிடப்படவில்லை" என்றும் அனைத்துலக மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)


# முள்ளிவாய்க்கால் நோக்கி பல்கலை. மாணவர்கள் பேரணி





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் களின் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் நோக்கிய உந்துருளி (மோட்டார் சைக்கிள்) பேரணி பல்கலைக்கழக முன்றலிலிருந்து நேற்றுக் காலை ஆரம்பமானது. பேரணி ஏ-9 வீதியூடாக பரந்தன் சந்தியை அடைந்து அங்கிருந்து முள்ளிவாய்க்காலை சென்றடைந்தது. வலி சுமந்த முள்ளிவாய்க்கால் மண்ணை நோக்கி மாபெரும் உந்துருளிப் பேரணி என்ற தொனிப்பொருளில் மாணவர்கள் இந்த மோட்டார் சைக்கிள் பேரணியை முன்னெ டுத்தனர். (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# கிழக்கிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு






முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு வாகரை மண்ணில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ராஜஸ்தான் றோயல்ஸ் vs பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்

இடம்: சவாய் மன்சிங் அரங்கு, ஜெய்ப்பூர். | நேரம்: மாலை 4 மணி




கொல்கத்தா நைட் ரைடர்ஸ் vs சன்ரைசர்ஸ் ஹைதராபாத்

ராஜிவ் காந்தி சர்வதேச அரங்கு, ஹைதராபாத். | நேரம்: இரவு 8 மணி

# வாழ்வா சாவா ஆட்டத்தில்

## ராஜஸ்தான் - பெங்களூர் மோதல்

53ஆவது ஐ.பி.எல்., லீக் போட்டியில் இன்று பெங்களூர் - ராஜஸ்தான் அணிகள் மோதுகின்றன. இதில், வெல்லும் அணிக்கு 'பிளே ஓப்' வாய்ப்பு அதிகம்

**பெங்களூர் எப்படி?**

இதுவரை 4 அரைச்சதம் உட்பட 526 ஓட்டங்கள் எடுத்த அணித் தலைவர் ஹோலி, டி வில்லியர்ஸ் (427), மன்தீப் சிங் (249) துடுப்பாட்டத்தில் கைகொடுக்கின்றனர். பார்த்திவ் படேல் (120) பெரியளவில் சோபிக்கவில்லை. பின்வரிசையில் சர்பராஸ் கான் சற்று வேகம் காட்டுகிறார்.

பந்துவீச்சில் 17 விக்கெட்டுக்கள் சாய்த்த உமேஷ் யாதவ் 'வேகத்தில்' நம்பிக்கை கொடுக்கிறார். மொஹமட் சிராஜ் (10) ஓட்டங்களை வாரி வழங்குகிறார். 'சுழல்' வீரர் சகால் 13 போட்டிகளில் 12 விக்கெட்டுக்கள் மட்டும் வீழ்த்தியது பெங்களூர் அணிக்கு பின்னடைவுதான்.

**ராஜஸ்தான் எப்படி?**

ராஜஸ்தான் அணி 13 போட்டிகளில் 6ல் (12 புள்ளி) வென்றது. ஓட்டவிகிதம் -0.403 என குறைவாக உள்ளது பலவீனம். இன்றைய போட்டியில் அதிக ஓட்டங்கள் வித்தியாசத்தில் அல்லது குறைந்த ஓவர்களில் வெற்றி பெற்றால்தான் அடுத்த சுற்று குறித்து யோசிக்க முடியும்.

கடைசியாக களமிறங்கிய 6 போட்டிகளில் தொடக்க வீரர் பட்லர் (548 ஓட்.,) 5ல் அரைச்சதம் அடிக்க, சஞ்சு சாம்சன் (391), அணித தலைவர் ரகானே (291) தங்கள் பங்கிற்கு கைகொடுக்கின்றனர். கடைசி நேரங்களில் திரிபாதி, கௌதம் ஓட்., சேர்க்க உதவுகின்றனர்.

பந்துவீச்சில் ஜோப்ரா ஆர்ச்சர் 13 விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளார். ரூ.11.5 கோடிக்கு வாங்கப்பட்ட உனதகட் 13 போட்டிகளில் 9 விக்கெட்டுக்கள் மட்டும் கைப்பற்றி ஏமாற்றம் அளிக்கிறார். 'சுழலில்' இஷ் சோதி, ஸ்ரேயாஸ் கோபால் ஆறுதல் கொடுக்கிறார்.

இன்று இரவு நடக்கும் லீக் போட்டியில் 14 புள்ளிகள் பெற்ற கொல்கத்தா கடைசி போட்டியில் ஹைதராபாத்தை (18) எதிர்கொள்கிறது.

இப்போட்டியில் வென்றால் 16 புள்ளிகளுடன், கொலகத்தா 'பிளே ஓப்' செல்லலாம். தோற்றால் மற்றைய போட்டிகளின் முடிவுக்காக காத்திருக்க வேண்டும். ஏற்கெனவே அடுத்த சுற்றுக்கு சென்று விட்ட ஹைதராபாத் அணிக்கு இப்போட்டி பயிற்சிக் களமாக அமையலாம்.

### ரி20 லீக் தொடர்

## வருகிறார் ஸ்ரீவ் ஸ்மித்

கனடாவில் நடக்கும் 'ரி20' லீக் தொடரில் அவுஸ்திரேலியாவின் ஸ்ரீவ் ஸ்மித் (வயது-28) விளையாடவுள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்டில் பந்தை சேதப்படுத்தி சர்ச்சையில் சிக்கிய ஸ்மித், வோர்னர், பான்கிராப்ட் தடையில் உள்ளனர்.

சர்வதேச, உள்ளூர் 'பிக் பாஷ்' தொடரில் களமிறங்க முடியாது. அதேநேரம் வோர்னர், பான்கிராப்ட் சிறிய அளவிலான போட்டிகளில் பங்கேற்க அனுமதி கிடைத்தது.

தற்போது ஸ்மித்தும் கனடாவில் ஜூன் 28-ஜூலை 16ல் நடக்கவுள்ள 'ரி20' லீக் தொடரில் பங்கேற்க உள்ளார்.

6 அணிகள் பங்கேற்கும் இத் தொடரை வட அமெரிக்கா நடத்துகிறது. சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் இதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

### 'ஃபிபா' கால்பந்து கவுண்ட் டவுண் 26

## இந்தியா புறக்கணிப்பு பின்னணி



இரண்டாம்உலகப்போர காரணமாக, 12 ஆண்டு இடைவெளிக்குப் பின், நான்காவது உலக கிண்ணத் தொடர், 1950ல் பிரேசிலில் நடந்தது.

முதன்முறையாக 'ரவுண்ட் - றொபின்' முறையில் போட்டிகள் நடந்தன. மொத்தம் 16 அணிகள் தேர்வாகின. இங்கிலாந்து, துருக்கி அணிகள் தொடரில் பங்கேற்க மறுத்தன.

ஆசிய தரப்பில் பங்கேற்க இந்தியா தகுதி பெற்றது. ஆனால் போக்குவரத்து செலவு, பயிற்சிக்கு போதிய நேரமின்மை, உலக கிண்ணத்தைவிட ஒலிம்பிக்தான் முக்கியம் உள்ளிட்ட காரணங்களை காட்டி போட்டியில் பங்கேற்க மறுத்தது.

அன்றைய காலகட்டத்தில் இந்திய வீரர்கள் வெறுங்காலுடன்தான் விளையாடினர். 'பிபா' விதிமுறையின்படி பாதணி (ஷூ) அணிநது விளையாட வேணடும். இதன் காரணமாகவும் உலக கிண்ணத்தை இந்தியா புறக்கணித்ததாக கூறப்படுகிறது.

**அதிரடி திருப்பம்**

மொத்தம் நான்கு பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும் முதல் இடத்தை பெறும் அணிகள் இறுதிச் சுற்றுக்கு தேர்வாகின. இதன்படி பிரேசில், உருகுவே, சுவீடன், ஸ்பெயின் அணிகள் இறுதிச் சுற்றுக்குள் நுழைந்தன.

**உருகுவே சம்பியன்**

இறுதிச் சுற்றில் சுவீடன் (7-1), ஸ்பெயின் (6-1) அணிகளுக்கு எதிராக அடுத்தடுத்து வெற்றி பெற்ற பிரேசில் அணி கிண்ணம் வெல்லும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. மறுபக்கம் உருகுவே அணி, சுவீடனுக்கு எதிராக (3-2) வெற்றியையும் ஸ்பெயினுக்கு எதிராக (2-2) சமனும் செய்தது.

இறுதிச் சுற்றின் கடைசி போட்டியில் பிரேசில் - உருகுவே அணிகள் மோதின.

இப்போட்டியை 'சமன்' செய்தாலே கிண்ணம் வெல்லலாம் என்ற நிலையில் களமிறங்கியது பிரேசில்.

ஆனால் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய உருகுவே அணி, 2-1என்ற கோல கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது முறையாக (1930, 1950) உலக கிண்ணத்தை கைப்பற்றியது.

### இந்தியன் பிறிமியர் லீக் - 2018
## புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| Q1 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | 13 | 9 | 4 | 18 |
| Q2 | சென்னை சுப்பர் கிங்ஸ் | 13 | 8 | 5 | 16 |
| 3 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 13 | 7 | 6 | 14 |
| 4 | மும்பை இந்தியன்ஸ் | 13 | 6 | 7 | 12 |
| 5 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 13 | 6 | 7 | 12 |
| 6 | ராஜஸ்தான் றோயல்ஸ் | 13 | 6 | 7 | 12 |
| 7 | கிங்ஸ் XI பஞ்சாப் | 13 | 6 | 7 | 12 |
| 8 | டில்லி டேர்டெவில்ஸ் | 13 | 4 | 9 | 8 |

# டில்லியிடம் வீழ்ந்தது சென்னை

டில்லி அணிக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் சென்னை அணி 34 ஓட்டங்களால் வீழ்ந்தது.

இந்தியாவில் 11ஆவது ஐ.பி.எல்., 'ரி20' தொடர் நடககிறது.

டில்லியில் நேற்று நடந்த 52ஆவது லீக் போட்டியில் 'பிளே-ஓப்' சுற்றுக்கு தகுதி பெற்றுவிட்ட சென்னை, டில்லி அணியை சந்தித்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை அணியின் தலைவர் தோனி களத்தடுப்பை தேர்வு செய்தார். சென்னை அணியில் வில்லேவுக்குப் பதில் லுங்கிடி இடம்பிடித்தார். டில்லி அணியில் ஜேசன் ரோய், ஜூனியர் டாலாவுக்குப்பதில் மக்ஸ்வெல், அவேஸ் வாய்ப்பு பெற்றனர்.

**லுங்கிடி அசத்தல்**

டில்லி அணிக்கு பிரித்வி ஷா 17 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். லுங்கிடி 'வேகத்தில்' ஸ்ரேயாஸ் (19), ரிஷாப் பண்ட் (38) சிக்கினர். மக்ஸ்வெல் (5), அபிஷேக் சர்மா (2) ஒற்றை இலக்கில் திரும்பினர். விஜய் ஷங்கர், ஹர்சல படேல் இணைந்து அதிரடி காட்டினர்.

20 ஓவர்கள் நிறைவில் டில்லி அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்கள் எடுத்தது.

விஜய் ஷங்கர், ஹர்சல் தலா 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். சென்னை சார்பில் அதிகபட்சமாக லுங்கிடி 2 விக்கெட் வீழ்த்தினார்.

**ராயுடு அரைச்சதம்**

எட்டிவிடும் இலக்கை துரத்திய சென்னை அணிக்கு வோட்சன் (14) விரைவில் ஆட்டமிழந்தார். சிறப்பாக விளையாடிய ராயுடு (50) அரைச்சதம் எட்டினார். ரெய்னா 15 ஓட்டங்கள் மட்டும் எடுத்தார். மிஸ்ரா 'சுழலில்' பில்லிங்ஸ் (1) சிக்கினார். தோனி (17), பிராவோ (1) அணியை கைவிட்டனர்.



முடிவில், சென்னை அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 128 ஓட்டங்கள் மட்டும் எடுத்து 34 ஓட்டங்களால் வீழ்ந்தது.

ஜடேஜா (27), சகார் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் டில்லி சார்பில் அதிகபட்சமாக மிஸ்ரா, போல்ட் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

### பகலிரவு டெஸ்ட்

## பி.சி.சி.ஐ முடிவு; ஹர்பஜன் எதிர்ப்பு

"அவுஸ்திரேலியாவுக்கு எதிராக பகலிரவு டெஸ்டில் களமிறங்க இந்திய அணி மறுத்தது தவறு. 'பிங்க்' நிற பந்தில் விளையாடுவதில் என்ன தயக்கம் உள்ளது," என இந்திய 'சுழல்' வீரர் ஹர்பஜன் கேள்வி எழுப்பி உள்ளார்.

எதிர்வரும் நவம்பரில் அவுஸ்திரேலியா செல்லும் இந்திய அணி 3 'ரி20', 4 டெஸ்ட், 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதல் 'ரி20' போட்டி பிரிஸ்பேனில் நவம்பர் 21 ஆம் திகதி நடக்கிறது. முதல் டெஸ்டை (டிச.6-10, அடிலெய்ட்) பகலிரவு ஆட்டமாக நடத்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை விரும்பியது. இதற்கு, இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) எதிர்ப்பு தெரிவித்ததால் கைவிடப்பட்டது.

இது குறித்து இந்திய சுழற்பந்துவீச்சாளர் ஹர்பஜன் கூறியதாவது,

இந்திய அணி எதற்காக பகலிரவு டெஸ்டில் களமிறங்க மறுக்கிறது. இது ஒரு விறுவிறுப்பான போட்டியாக இருக்கும். 'பிங்க்' நிற பந்தில் விளையாடுவதில் என்ன பயம். டெஸ்ட் போட்டியில் முதல் முறையாக பங்கேற்ற போது, எஸ்.ஜி., பந்தில் மட்டும் விளையாடினோம்.

பின், படிப்படியாக 'குக்கபுரா, டக்ஸ்' பந்துகளில் பந்து வீச கற்றுக் கொண்டோம். இதைப்போல, 'பிங்க்' நிற பந்தில் ஒரு முறை விளையாடி விட்டால் சரியாகி விடும்.

**தயக்கம் வேண்டாம்**

நமது அணியிலும் வேகப் பந்துவீச்சாளர்கள் இருக்கின்றனர். இவர்களை வைத்து அவுஸ்திரேலியாவுக்கு நெருக்கடி கொடுக்கலாம். நமது துடுப்பாட்ட வீரர்



கள் அவுஸ்திரேலிய 'வேகத்தை' எதிர் கொள்ள ஏன் மறுக்கின்றனர். இங்கிலாந்து மண்ணில், அவர்களின் ஆடுகளத்திற்கு ஏற்ப விளையாட முடியாது என கூற முடியுமா. பின், எதற்காக 'பிங்க்' நிற சவாலை எதிர்கொள்ள தயங்க வேணடும்.

நமது மண்ணில் பனிக் காலத்தை தவிர மற்ற நேரங்களில் இம்மாதிரியான போட்டிகளில் பங்கேற்று பார்க்கலாம். இவ்வாறு ஹர்பஜன் சிங் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-இந்தியாவுக்கிடையிலான நட்புறவுகளை மேலும் பலப்படுத்துவது எனது அரசின் எதிர்பார்ப்பு

## இந்திய இராணுவத் தளபதியிடம் ஜனாதிபதி எடுத்துரைப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் இந்திய இராணுவ தளபதி ஜெனரல் பிபின் ராவட் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தார்.

சகோதர அயல்நாடுகள் என்றவகையில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் நீண்டகாலமாக நிலவிவரும் நற்புறவுகளை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, இந்த உறவினை மேலும் பலப்படுத்துவது தனது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகுமெனக் தெரிவித்தார்.

இருநாடுகளுக்குமிடையிலான புலனாய்வு தகவல் பிரிவுகளை பலப்படுத்துதல், தேசிய மற்றும் பிராந்திய பாதுகாப்புக்கு மிகவும் முக்கியமானதாகுமெனக் குறிப்பிட்ட இந்திய இராணுவத்தின் பணிக்குழாம் பிரதானி, இதற்கு இலங்கை அரசாங்கத்தின் உதவியை எதிர் பார்ப்பதாக தெரிவித்தார்.



புலனாய்வு பிரிவை பயிற்றுவித்தல் மற்றும் இருநாடுகளுக்கிடையில்நவீன தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக இதன் போது கவனம் செலுத்தப் பட்டது.

தீவு நாடு என்ற வகையில் சட்டவிரோத போதைப் பொருள் கடத்தல் காரணமாக இலங்கைக்கு பெரும் பாதிப்புகள் ஏற்படுவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, இதனை தடை செய்வதற்கு இந்திய இராணுவத்தின் உதவியை எதிர்பார்ப்பதாகவும்தெரிவித்தார்.

இந்த சந்திப்பை நினைவுகூரும் வகையில் ஜனாதிபதியினால் இந்திய இராணுவ பணிக்குழாம் பிரதானிக்கு விசேட நினைவுச் சின்னம் ஒன்று வழங்கிவைக்கப்பட்டது. இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார். (இ-7)

# இலங்கைத் தமிழர்களுக்காக போராட தமிழக இளைஞர்கள் முன்வர வேண்டும்

## சீமான் அழைப்பு

(சென்னை)

இலங்கை தமிழர்களுக்காக சமூக வளைத்தளங்களில் போராட தமிழக இளைஞர்கள் முன்வர வேண்டுமென நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அழைப்பு விடுத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தையொட்டி நாம் தமிழர் கட்சி நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



"இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு தீர்வினை பெற்றுக்கொடுப்பதற்கு பொது வாக்கெடுப்பு மிகவும் அவசியமாகும்.

அதற்கு தமிழக இளைஞர்கள் சமூக வளைத்தளங்களின் ஊடாகவே அவர்களுக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு போராட முன் வர வேண்டும்.

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை சர்வதேசத்தின் உதவியோடுகடந்த 2009 ஆம் ஆண்டு அழித்து முடிவுக்கு கொண்டு வந்தது.

இவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட யுத்தம் உலகிலுள்ள அனைத்து தமிழரின் ஆழ்மனதிலும் வடுக்களாக காணப்படுகின்றது.

இலட்சக்கணக்கான தமிழர்கள் தாயகத்தின் விடுதலைக்காக உயிர் நீத்தார்கள். 9 ஆண்டுகள் கடந்தாலும் அதனால் ஏற்பட்ட தோல்வி எம்மை வருத்திக்கொண்டுதான் உள்ளது.

இதனால் தாய் மண்ணிற்காக உதிரத்தை சிந்திய இந்நாளை தமிழர்களின் வீழ்ச்சிக்குரிய நாளாக அல்லாது விடுதலையெழுச்சிக்குரிய நாளாக கருதி அனைவரும் போராட முன்வர வேண்டும்" எனவும் சீமான் அழைப்பு விடுத்துள்ளார். (இ-7)

## சட்டமாணி தெரிவுப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் சட்டமாணி தெரிவுப் பரீட்சை நாளை 20.05.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இப் பரீட்சை யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மற்றும் விஞ்ஞான பீட பரீட்சை மண்டபங்களில் நடத்தப்படவுள்ளது.

எனவே விண்ணப்பதாரிகள் தங்களுக்கான பரீட்சை மண்டபத்தை பரீட்சை ஆரம்பமாவதற்கு முன் தெரிவு செய்து பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் கேட்டுக் கொள்வதுடன் அனுமதி அட்டைகள் இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக பெற்றுப் பரீட்சைக்குத் தோற்றுமாறு அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)


## பொன்மனச் செல்விக்கு இதய அஞ்சலி

அமரர்.

### இந்திரலோஜினி உமாகாந்தன்



எமது கல்லூரியின் ஓய்வு நிலை மூத்த ஆசிரியை
அமரர்.
இந்திரலோஜினி உமாகாந்தன்
அவர்கள்
18.05.2018 அன்று
இறைபதம் அடைந்த
செய்தியைக் கேட்டு ஆழ்ந்த
துயர் அடைகின்றோம்.
அன்னாரின் இழப்பினால்
துயருறும்
அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கனகரத்தினம் ம.ம.வி.

(496)


## இராசி பலன்

**மீனம்:** பேச்சில் கனிவு பிறக்கும், உறவினர்கள் வழியில் எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேடம்:** எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், புதிய கூட்டாளிகளை சந்திக்கும் வாய்ப்புண்டு.

**இடபம்:** வீட்டு உபயோகப்பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**மிதுனம்:** எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், கற்பனை மிகுதியான நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கும்பம்:** புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், வியாபார விருத்தியுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | புத | சூரி | |
| | **இராசி பலன்** கிரகநிலை | | ராகு |
| செவ், கேது | சந்திராஸ்டமம் மூலம் இரவு 11.00 | | |
| | | கடக-சந் | |
| சனி | | குரு | |

**19.05.2018**

வைகாசி 05, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு

சதுர்த்தி முற்பகல் 9.39 மணிவரை

திருவாதிரை காலை 6.14 மணிவரை

புனர்பூசம் பின்னிரவு 4.35 மணிவரை

சுபநேரம் 2.52-4.22 மணிவரை

இராகுகாலம் 8.52-10.22 மணிவரை

வளவன்

**கடகம்:** பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் வகையில் அமையும், பயணத்தால் பலனுண்டு.

**மகரம்:** கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், பழைய பிரச்சினைகளைத் தீர்க்க முழு மூச்சுடன் செயற்படுவீர்கள்.

**சிம்மம்:** தொலைபேசி வழியில் சந்தோசம் தரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்யும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் புகழ் கூடும்.

**தனுசு:** உறவினர்கள் உங்கள் வீடு தேடி வரலாம், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், புதிய பொருட்கள் வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், [illegible]

**துலாம்:** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், தடைப்பட்ட காரியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ரோக பயமுண்டு.

**கன்னி:** திறமைகள் வெளிப்படும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நேற்று முற்பகல் 11 மணிக்கு உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த நினைவேந்தல் நிகழ்வில் பல்கலைக்கழகத்தில் உள்ள அலங்கார சுற்று வட்டத்தில் சுடரேற்றி மலர் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் நினைவுச்சுடரை ஏற்றி வைத்ததை தொடர்ந்து பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள் உட்பட பலர் சுடர்களை ஏந்தியவாறு, நினைவேந்தல் கீதம் இசைக்க அஞ்சலி செலுத்தினர். இதனையடுத்து யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் முள்ளிவாய்க்கால் பிரகடனம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

(படங்கள்:- பொ.சோபிகா)





முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு கடற்றொழிலாளர்கள் தொழில் நடவடிக்கைகளை புறக்கணித்து போரில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு பாடசாலைகளிலும் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

(படங்கள்:-ஐ.சிவசாந்தன்)



ரோட்டறிக்கழக அனுசரணையில் 25 துவிச்சக்கர வண்டிகள் பன்னாலை மெய்கண்டான் மகாவித்தியால மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. பாடசாலை அதிபர் சுலைமாமதி கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், ரோட்டறிக் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

(படம்:- மகாலிங்கம்)




கரவெட்டி பிரதேச சபை முன்பு நேற்று வெள்ளிக்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு சுடர் ஏற்றி அனுஷ்டிக்கப்பட்டது. (படம்:-மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கு முப்படையினரும் தயார் நிலையில்

(கொழும்பு)

அசாதாரண காலநிலையை எதிர்கொள்வதற்கு முப்படையினரும் தயாராக இருப்பதாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீர் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். நாட்டின் பல பிரதேசங்களில் மழை பெய்யக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. தற்பொழுது பெய்து வரும் மழையின் காரணமாக பல நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் குறித்த பிரசேதங்களில் உள்ள பொது மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் நாட்டின் சில இடங்களில் மழையுடன் கூடிய காலநிலை தணிந்திருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். இருப்பினும் தற்பொழுது உடவளவ நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் தெதுறு ஓயா நீர்த்தேக்கத்தின் 8 வான் கதவுகள் திறக்கபட்டன. விசேடமாக நீர்ப்பாசன பிரதேசங்களின் தாழ் நிலங்களில் வாழும் பொதுமக்களுக்கு இது தொடர்பாக அடிக்கடி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனைகளை பின்பற்றுமாறு நாம் கேட்டுக்கொண்டுள்ளோம். திடீரென அதிகரிக்க்க் கூடிய நீர்ப்பாசன நீர்த்தேக்கங்கள் தொடர்பில் அப்பிரதேசத்தில் உள்ள பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன்செயற்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். திடீர் அனர்த்தத்தின் போது முப்படையினரை போன்று பொலிஸாரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு முப்படை பொலிஸார் மற்றும் அனைத்து பிரிவுகளை சேர்ந்த படையினர் கடற்றொழிற்றுறையினருக்கும் அடிக்கடி தெளிவுபடுத்தப்பட்டது. ஏற்படக்கூடிய திடீர் அனர்த்தம் குறித்தே இவ்வாறு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

பாதகமான காலநிலை நிலவக்கூடும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். தொடர்ந்தும் நாம் இது தொடர்பில் அவதானத்துடன் செயற்பட்டு வருகின்றோம். இதனை எதிர்கொள்வதற்கான தயார் நிலையில் இருப்பதாக அவர்மேலும் தெரிவித்தார். (இ-7)


## பகிரங்க ஏல விற்பனை

இடம்: யா/நல்லூர் ஸ்தான் சி.சி.த.க.பாடசாலை
நேரம்: முற்பகல் 9.30 மணி
காலம்: 28.05.2018

**பொருட்கள்**

அலுவலக கதிரை-02, ஸ்கிரீன்(மரம்)-02, விஞ்ஞானகூட மேசை(மரம்)-01, Computer Chair-01 (சி-2643)

-அதிபர்-

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

### திரு.பொன்னையா வரதகுலசிங்கம்

(அதிபர், புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை)




19.05.2018 இன்று சனிக்கிழமை மணிவிழா காணும் எமது சக அதிபர் **திரு. பொ.வரதகுலசிங்கம்** அவர்கள் கல்விப்புலத்துக்கு ஆற்றிய சேவைக்கு நன்றி கூறுவதுடன் அவர்களது ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

அதிபர் சங்கம்,
கோப்பாய் கல்விக் கோட்டம்.

(சி-2627)

## அகவை அறுபதில்

60 years

அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

திரு. **கந்தசாமி விமலநாதன்**
(உதவிக் கல்விப் பணிப்பாளர், முன்பள்ளி)



யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளராக 2009.03.27-2018.05.18 வரை பணியாற்றி இன்று மணிவிழாக் காணும் திரு.க.விமலநாதன் அவர்களை பல்லாண்டு காலம் நல்வாழ்வு வாழ இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

கல்வி அபிவிருத்திப் பிரிவு, வலயக் கல்வி அலுவலகம்,

## சேவைநலன் பாராட்டு

### திரு.இராசரத்தினம் இராசேஸ்வரன்

(ஆசிரியர்-விவசாயம்)



Congrtulations

**எமது பாடசாலைக்கான சேவைக்காலம்**
**01.01.2003-19.05.2018**

எமது பாடசாலையில் 15 வருடங்களாக விவசாய பாட ஆசிரியராக கடமையாற்றி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டதுடன் பாடசாலையின் அபிவிருத்திக்காக பல்வேறு வழிகளிலும் முன்னின்று உழைத்து 2018.05.19 இன்று அகவை அறுபதில் (60) ஓய்வு பெற்றுச் செல்லும் எமது ஆசான் என்றும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

(4112)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கோப்பாய் மகா வித்தியாலயம்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603,
021 567 1532

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## FACULTY OF MEDICINE WALK-IN-INTERVIEW

### Post of Temporary Assistant Lecturer/Demonstrator

Walk-in-interview for appointments to the post of Temporary Assistant Lecturer/Demonstrator at Faculty of Medicine will be held on 22.05.2018 at 3.00p.m at the Board Room of this University.

Candidates who have passed the final examination of the following degrees from the state Universities or UGC recognized Foreign Universities are invited for Walk-in-interview for the above posts for the Pre-Clinical, Para-Clinical and Clinical Departments of the faculty of Medicine:

Clinical/Para-Clinical Departments-Medical Degree
Pre-Clinical Departments-Medical/Dental Degree
**Note:** For the Department of Biochemistry the degree of B.V.Sc.will also be considered.

| Post | Salary Scale |
|---|---|
| Temporary Assistant Lecturer | Rs.40,324/-(fixed)p.m |
| Temporary Demonstrator | Rs.33,100/-(fixed)p.m |

Interested candidates with the required qualifications are expected to be present for the interview at the time mentioned above with the educational and any other relevant certificates along with the certified copies, National Identity card and **self prepared application.**

Registrar,
University of Jaffna.

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 2ஆம் பாதம்
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L சவுதி அரேபியாவில் கப்பலில் வேலை
எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்
தொ.இ: B/7660

பிறப்பு: 1988 கிறிஸ்தவம் RC
நட்சத்திரம்: சித்திரை
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/Lகடன் அதிகாரி
தொ.இ: B/7664

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: விசாகம்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:NITலண்டன் NOTPR
தொ.இ: B/7668

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 1 ஆம்பாதம்
கி.பா: சூரிசெவ் 5 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L அரசதொழில்
தொ.இ: B/7669

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:BA தனியார் தொழில்
தொ.இ: G/7801

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்:அவிட்டம் 2ஆம் பாதம்
கி.பா: 8
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: பட்டதாரி
தொ.இ: G/7806

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூசம் 1ஆம் பாதம்
உயரம்: 155cm
தகைமை/தொழில்:BAஅரச தொழில்
தொ.இ: G/7807

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 4 ஆம்பாதம்
கி.பா: 10
உயரம்: 158cm
தகைமை/தொழில்:விஞ்ஞானபட்டதாரி
தொ.இ: G/7809

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ருபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org























முள்ளியவாய்க்கால் நினைவேந்தல் ஈழத் தமிழர்களின் வரலாற்றில் முக்கியமான பதிவாகும். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் எச்சங்களையும் சுமந்து உயிர்த்தியாகம் செய்த இரு இடம் முள்ளிவாய்க்கால். அந்த வகையில் நேற்றையதினம் முற்பகல் 11 மணிக்கு முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு உயிர் நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனை மனதில் நினைவில் கொண்டு முள்ளிவாய்க்கால் 9 ஆம் ஆண்டு நினைவு நாளான நேற்றைய தினத்தில் வடக்கிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் நண்பகல் 12 மணிவரை மூடி துக்கதினம் அனுஷ்டிக்குமாறு வர்த்தக சங்கத்தினர் அறிவித்தல் விடுத்திருந்தனர். இந்நிலையில் நேற்று நண்பகல் 12 மணிவரை வர்த்தகர்கள் கடைகளை அடைத்து துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு கோரப்பட்டதற்கமைவாக முல்லைத்தீவு மாவட்டமெங்கும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, தண்ணீரூற்று, ஒட்டுசுட்டான், மாங்குளம், மல்லாவி உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் உள்ள வர்த்தகர்கள் கடைகளை பூட்டி தமது பூரண ஆதரவை வழங்கியிருந்தனர். கிளிநொச்சியில் நேற்று துக்க தினம் கடைப்பிடிக்கப்பட்டது. அனைத்து வியாபார நிலையங்கள், சந்தைகள் என்பன பூட்டப்பட்டு கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு துக்க தினமாக கடைப்பிடிக்கப்பட்டது. மாவட்டத்தில் பல பாடசாலைகளில் மாகாணக் கொடி அரை கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தது. அத்தோடு அரச நிறுவனங்கள், வங்கிகள் வழமைபோல் திறக்கப்பட்டிருந்த போதும் வழமைபோல் மக்கள் செல்லாத காரணத்தினால் அவற்றின் செயற்பாடுகளும் முடங்கியிருந்தன. (2-281-312)

# இலவசப் பயிற்சி நெறிகள்

(புதுக்குடியிருப்பு)

சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் இலவசப் பயிற்சி நெறிகளான கணனி வன்பொருள் மற்றும் கையடக்க தொலைபேசி திருத்தம் தொடர்பான பயிற்சி நெறிகள் எதிர்வரும் 5.6.2018 மற்றும் 7.6.2018 ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஆகவே இப் பயிற்சி நெறிகளில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் 4.6.2018 ஆம் திகதிக்கு முன்பாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலக விதாதாவள நிலையத்தில் தங்களது பதிவுகளை மேற்கொள்ள முடியுமென பிரதேச செயலாளர் அறியத் தந்துள்ளார். மேலதிக தகவல்களுக்கு 021 2290470, 071 218 7431, 077 990 3640 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (2)

### ஒரு மில்லியன் ரூபா செலவில்

# மருதமடுக் குளத்தின் நீர்விநியோக வாய்க்கால் புனரமைப்பு வேலைகள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன்கட்டுக் குள நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட மருதமடுக்குளத்தின் நீர் விநியோக வாய்க்காலின் புனரமைப்பு வேலைகள் ஒரு மில்லியன் ரூபாவில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மருதமடுக்குளத்தின் 4.8 கிலோமீற்றர் நீளமான நீர் விநியோக வாய்க்கால் சேதமடைந்து காணப்படுவதனால் விவசாயச் செய்கைக்கான நீரைப்பாய்ச்சுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தற்போது இக்குளத்தின் கீழ் சிறுபோகச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இப் பயிர்ச்செய்கைக்கான நீர் விநியோகத்தை சேதமடைந்து காணப்படுகின்ற வாய்க்கால் ஊடாக மேற்கொள்கின்றபோது அதிகளவான நீர் வீண் விரயமாகுவதாகவும் இதனைப் புனரமைத்துத் தருமாறு இப் பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நீர்ப்பாசனத் திணைக்களம், இதனைப் புனரமைப்பதற்கு கூடுதலான நிதி தேவையென்றும் தற்போது ஒரு மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்று அதன் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட மூலம் நிதியைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு கோரிக்கை விடுத்திருக்கின்றோம். அதேபோல எமது திணைக்களத்திற்கும் கோரிக்கை விடுத்திருக்கின்றோம்,

குறித்த பிரதான நீர் விநியோக வாய்க்காலின் ஒரு கிலோ மீற்றர் பகுதியை புனரமைப்பதற்கு 6 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகின்றது. குறித்த 4.8 கிலோ மீற்றரைப் புனரமைப்பதற்கு 24 மில்லியன் ரூபா வரை தேவைப்படுவதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# செம்மலை மகா வித்தியில் மே-18 நினைவேந்தல் நிகழ்வு






(பனிக்கன்குளம்)

இறுதிப்போரில் உயிர் நீத்த தமிழ் உறவுகளை நினைவேந்தும் நிகழ்வு மு/செம்மலை ம.வித்தியாலயத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

காலை ஒன்றுகூடலில் நேற்றைய நாள் துக்கநாளாக கொள்ளப்பட்டு பாடசாலையின் கொடியானது அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இறுதிப்போரில் உயிர்நீத்த எமது உறவுகளை நினைவுகூர்ந்து மாணவர்களும் ஆசிரியர்களும் ஒரு மணித்துளி அகவணக்கத்தைச் செலுத்தினர். அகவணக்கத்தை தொடர்ந்து பாடசாலை அதிபரால் நினைவுரை ஆற்றப்பட்டது. முற்பகல் 10.45 மணியளவில் வித்தியாலய சிவக்கொழுந்து மண்டபத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் மே-18 நினை வேந்தலுக்காக ஒன்று கூடினர்.

பொதுச்சுடர் முற்பகல் 11 மணிக்கு ஏற்றப்பட்டு தொடர்ந்து ஆசிரியர்களும் மாணவர்களும் நினைவுச்சுடர்களை ஏற்றி மலர்களை தூவி நினை வேந்தல் நிகழ்வில் பங்கெடுத்தனர்.

அதனைத் தொடர்ந்து நினைவுரைகள் ஆற்றப்பட்டு நினைவேந்தல் நிகழ்வானது நிறைவுற்றது. (2-281)






# ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்

(பளை)

பளை சக்தி கல்வி நிறுவனத்தின் எட்டாவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நிறுவன இயக்குநர் வ.சாந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் த.குருகுலராஜா, சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசன், கௌரவ விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் நிறுவன ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கு கொள்ளும் கலை நிகழ்ச்சிகள், மக்களுக்குத் தேவையான சிறந்த கருத்துக்களை வழங்குவது சினிமாவா? இலக்கியமா? என்ற பொருளில் அமைந்த சிறப்புப் பட்டிமண்டபம் என்பன இடம்பெறவுள்ளன. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 ஆயிரத்து 964 குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்க வேண்டியுள்ளது

## கரைச்சி பிரதேச செயலாளர் முகுந்தன் தெரிவிப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்தில் சுமார் எண்ணாயிரத்து 964 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவைகள் காணப்படுவதாக கரைச்சிப் பிரதேச செயலாளர் ரீ.முகுந்தன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் அதிக சனத்தொகை கொண்ட பிரதேசமாக காணப்படும் கரைச்சிப்பிரதேசத்தில் கூடுதலான குடும்பங்கள் நிரந்தரமான வீடுகள் இல்லாது கடந்த ஒன்பது வருடங்களுக்கு மேலாக தற்காலிக வீடுகளில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பாக நிரந்தர வீட்டுத் திட்டங்களை பெற்றுக் கொள்ள தகுதியுடைய குடும்பங்கள் பல ஏற்கனவே பிறருக்கு வழங்கப்பட்ட மத்திய வகுப்புத் திட்டக்காணிகளில் வாழ்வதனாலும் உரிய காணி ஆவணங்கள் இன்றியும் வீட்டுத் திட்டங்களைப் பெற்றுக் கொள்ள முடியாது தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு வாழ்ந்து வருகின்ற குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதாவது. கிளிநொச்சி கரைச்சிப்பிரதேசத்தில் மீள் குடியேறிய 24ஆயிரத்து 601 குடும்பங்களில் 14 ஆயிரத்து 637 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கரைச்சிப்பிரதேச செயலர் ரி.முகுந்தன் கரைச்சிப்பிரதேசத்தில் மீள்குடியேறிய 24ஆயிரத்து 601 குடும்பங்களில் 14 ஆயிரத்து 637 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தற்போது எண்ணாயிரத்து 964 குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுக்க வேண்டியுள்ளதுடன். பகுதியளவில் சேதமடைந்த 275 வீடுகளை புனரமைத்துக்கொடுக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

இதேவேளை கடந்தாண்டில் 442 நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

பகுதிச்சேதமடைந்த 20 வீடுகள் புனரமைக்கப்பட்டிருக்கின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் 193 வீடுகளுக்கான வேலைத் திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த வீட்டுத்திட்டமானது மூன்றாண்டுத்திட்டம் என்பதனால் பகுதி பகுதியாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இந்த வீடுகள் புதிய வகைக் கல்லைக்கொண்டு அமைப்பதாகத் தெரிவிக்கப்பட்டாலும் அதனை மக்கள் பெரிதாக விரும்பவில்லை. தற்போது ஒரு வீடு மட்டும் அமைக்கப்பட்டு வருகின்றது.

மக்கள் அதைப்பார்வையிட்டு ஏனைய வீடுகளை அமைக்கக்கூடியதாக இருக்கும். அதனால் அதன் கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-315)




# இறந்த எருமை மாட்டை இறைச்சியாக்கியவர்கள் கைது.

(பனிக்கன்குளம்)

வவுனியா காத்தார்சின்னக் குளம்பகுதியில் இறந்த எருமை மாடு ஒன்றினை இறைச்சியாக்கி விற்பனை செய்வதற்கு மேற்கொண்ட முயற்சி விசேட அதிரடிப்படையினரால் முறியடிக்கப்பட்டுள்ளதுடன் இரு சந்தேக நபர்களையும் கைது செய்து அவர்களிடமிருந்த 90 கிலோ இறைச்சியும் மீட்கப்பட்டுள்ளது.

காத்தார்சின்னக்குளம்பகுதியில் வசித்துவந்த நபர் ஒருவரின் எருமை மாடு ஒன்று கயிறு கழுத்தில் இறுக்கி உயிரிழந்துள்ளது. உயிரிழந்த எருமை மாட்டை வெட்டி இறைச்சியாக்க முற்பட்டபோது விசேட அதிரடிப்படையினர் இவர்களை கையும் மெய்யுமாக பிடித்து 90கிலோ வெட்டிய இறைச்சியுடன் வனஜீவராசிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களிடம் ஒப்படைத்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை வனஜீவராசிகள் திணைக்களம் மேற்கொண்டு வருவதுடன் கைது செய்யப்பட்ட இருவரையும் கைப்பற்றப்பட்ட 90கிலோ இறைச்சியையும் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

# பகலில் குரங்குகளின் தொல்லை இரவில் யானைகளின் அட்டகாசம்

(கண்டாவளை)

இரவுவேளைகளில் காட்டு யானைகளின் தொல்லையினையும் பகல் வேளைகளில் குரங்குகளின் தொல்லைகளையும்அனுபவித்து வருவதாக முல்லைத்தீவு முத்தையன் கட்டுப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன்கட்டு பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லை, குரங்குத் தொல்லை என்பன அதிகரித்துக்காணப்படுவதாகவும் இதனால் விவசாயிகள்,மக்கள் ஆகியோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

அதாவது.பகல் வேளைகளில் குரங்குகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதுடன். விவசாயப்பயிர்ச் செய்கைகளையும் அழித்து வருவதுடன். வீடுகளுக்குள்ளும் புகுந்து சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன.

இதேபோன்று இரவுவேளைகளில் காட்டு யானைகளின் தொல்லையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. மாலையானதும் ஊர் மனைகளுக்குள் கூட்டமாக நுழைகின்ற யானைகள் கடும் சேதங்களை ஏற்படுத்திவருகின்றன.

இவ்வாறு காட்டு யானைகளின் தொல்லையினாலும் குரங்குகளின் தொல்லையினாலும் தாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும்சில வேளைகளில் உயிராபத்துக்களை எதிர்கொள்கின்ற நிலைமையும் காணப்படுவதாகவும் மேற்படி பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (2-312)

# பொன்னகரில் தொழிலாளர் தினம்

# மகஜர் கையளிக்கப்பட்டு கையொப்பங்களும் திரட்டல்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொன்னகர் பிரதேசத்தில் தொழிலாளர் தின நிகழ்வு நேற்று முன் தினம் பிற்பகல் 4 மணியளவில் பொன்னகர் வடக்கு கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் கிராம அலுவலர் தலைமையில் இடம்பெற்றது.

கிராமமட்ட அமைப்புக்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற நிகழ்வில் மூன்று பெண் தொழில் முயற்சியாளர்கள் அடங்கலாக ஐவர் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் தொழிலாளர்களின் உரிமை தொடர்பிலான மகஜர் ஒன்றும் தொழில் திணைக்கள உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட்டது. இதன்போது தொழிலாளர் உரிமையைப் பாதுகாக்கக் கோரி கையொப்பங்களும் திரட்டப்பட்டன. இந்நிகழ்வில் தொழில் திணைக்கள அதிகாரிகள், கிராமசேவையாளர். பாடசாலை அதிபர். மாணவர்கள், கிராமமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், மக்கள் என பெருமளவானோர் பங்கேற்றிருந்தனர்.

தொழிலாளர் தினம் என்பது நாடளாவிய ரீதியில் அரசியலாக்கப்பட்டுள்ள நிலையில், கிராமங்கள் தோறும் தொழிலாளர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுதல் வரவேற்கத் தக்கது என கல்விமான்கள் தெரிவிக்கின்றனர். அதற்கு பொன்னகர் பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு எடுத்துக்காட்டாக அமையுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (2)

# சதொச நிலைய வளாகத்தில்

# மனித எலும்பு அகழ்வு, ஆய்வுகள் மீண்டும் 27ஆம் திகதி முன்னெடுக்கப்படும்

(மன்னார்)

மன்னார் நகர நுழைவாயிலில் அமைந்திருந்து உடைக்கப்பட்டு புதிய கட்டடம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த "லங்கா சதொச" விற்பனை நிலைய வளாகத்தில் மனித எலும்பு அகழ்வு மற்றும் ஆய்வுகள் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மன்னார் நீதவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் இடம்பெறவுள்ளதாக சட்டத்தரணி பா.டெனிஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குறித்த வளாகத்திற்கு நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் நீதவான் நேரடியாகச் சென்று பார்வையிட்டிருந்தார்.

இதன்போது களனி பல்கலைக்கழக பேராசிரியர் பத்மதேவா,விசேட சட்ட வைத்திய நிபுணர், சட்டத்தரணிகள், மன்னார் நகர சபையின் தலைவர், விசேட தடயவியல் நிபுணத்துவ பொலிஸார், தேசிய நீர் வளங்கள் வடிகாலமைப்புச்சபை அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

அதனைத்தொடர்ந்து அன்றைய தினம் மதியம் மன்னார் நீதிமன்றத்தில் நீதவான் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலுக்கு களனி பல்கலைக்கழக பேராசிரியர் பத்மதேவா. விசேட சட்ட வைத்திய நிபுணர் உட்பட அழைக்கப்பட்ட திணைக்கள பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன் போதே எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு மன்னார் நகர நுழைவாயிலில் அமைந்திருந்து உடைக்கப்பட்டு புதிய கட்டடம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த "லங்கா சதொச" விற்பனை நிலைய வளாகத்தில் மனித எலும்பு அகழ்வு மற்றும் ஆய்வுகள் மேற்கொள்ளுவது என முடிவு எடுக்கப்பட்டது.

அழைக்கப்பட்ட திணைக்கள அதிகாரிகள் முதல் நாள் வருகை தருவதினால் குறிக்கப்பட்ட நேரத்தில் மனித எலும்பு அகழ்வு மற்றும் ஆய்வுகள் இடம்பெறும் என சட்டத்தரணி பா.டெனிஸ்வரன் மேலும் தெரிவித்தார். (2)

# பொதுசன நூலகத்தை விடுவிக்கக்கோரி கட்டளைத் தளபதிக்கு கடிதம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்துக்கான பொதுசன நூலகத்தை விரைந்து விடுவிக்கக்கோரி 571ஆவது கட்டளை தளபதிக்கு கரைச்சி பிரதேச சபை கடிதம் அனுப்பியுள்ளது. அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

கரைச்சி பிரதேச சபைக்கு சொந்தமான பொதுசன நூலகத்தை அதனுடன் சேர்ந்த அலுவலக தொகுதியையும் கடந்த 2009ஆம் ஆண்டில் இருந்து இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருக்கிறது

1975ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட கிளிநொச்சி பொதுசன நூலகம் எண்கோண வடிவில் நவீன வசதிகளுடன் காணப்பட்டது. கிளிநொச்சி நகரின் [illegible] அடையாளமாகவும் திகழ்ந்தது.

எனினும் தொடர்ச்சியாக கோரிக்கை விடப்பட்டு வருகின்ற போதும் குறித்த நூலகத்தில் இராணுவம் தங்கியிருப்பது பொருத்தமானது அல்ல என கடிதத்தில் சுட்டிக்கட்டியுள்ளார் கரைச்சி பிரதேச சபை தவிசாளர். கிளிநொச்சியில் பல்கலைக்கழகமும் பல்துறை கல்வி நிறுவனங்களும் அதிகரித்துள்ள போதிலும் கிளிநொச்சி மாவட்ட கல்வி நிலை 25 ஆவது இடத்தில் காணப்படுகிறது.

இதற்கு உசாத்துணை சார் வள நிலையங்கள் போதாமை முக்கியமானது. இத்தகைய பிரதான நூலகம் இராணுவ வசம் இருப்பதனால் அறிவு சார் அமைவிடமாக திகழக் கூடிய கிளிநொச்சி பொதுசன நூலகத்தை மீள நிர்மாணிப்பதில் பாரிய இடர்களை எதிர் நோக்கி வருவதனால் குறித்த நூலகத்தை கரைச்சி பிரதேச சபையிடம் ஒப்படைக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று 571ஆவது கட்டளை தளபதிக்கு எழுதிய கடிதத்தில் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் சுட்டிக்காட்டியுள்ளார். (2-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் – 155

## பூக்களின் பயிர்ச்செய்கையும் சமகால தேவையும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

தென்னிலங்கையில் மலர்கள் மற்றும் அழகுத் தாவரங்களை உற்பத்தி செய்பவர்கள் அவற்றை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர். இதன்மூலம் உற்பத்தியாளர்களுக்கு அதிக வருவாய் ஆரம்ப காலங்களில் இருந்து வந்தது.

இதனை வடபகுதி நோக்கி நகர்த்துதல் அவசியமாகின்றது. ஆனால் தற்போதுள்ள நடைமுறையில் இத்தொழிலில் ஈடுபடுபவர்களால் அதிக வருவாயை ஈட்ட முடியாதிருப்பதுடன் இதன் மூலம் கிடைக்கும் அந்நிய செலாவணியும் கணிசமான என்னும் போது எமக்கு உலகச் சந்தைதான் தற்போது நடைமுறைச் சாத்தியமானது. அதனை நாம் பெறுவதற்கு பலாலி விமான நிலையம் தரமுயர்த்தப்பட்டு சர்வதேச விமானங்கள் வந்து போகும் நிலையை அடைய வேண்டும்.

விமான நிலையம் தரமுயர்த்தப்படும் போது வட மாகாணம் பல விடயங்களில் முன்னகரும் என்பதுடன் பல தொழிற்றுறைகளை ஆரம்பிப்பதும் பொருத்தமானதாக விருக்கும். காலம் கனிந்து வட பகுதிக்கான உலகளாவிய விமான நிலையம் இயங்கத் தொடங்கும் போது நிச்சயமாக இது நடக்கும். அதற்கேற்ப ஆரம்பகட்ட நடவடிக் முன்னெடுக்கக்கூடிய தொழிற்றுறைகளுள் மலர்கள் மற்றும் அழகுத்தாவரங்களின் உற்பத்தியும் இனங்காணப்பட்டுள்ளது. பெண்களால் அவரவர் வீட்டிலிருந்தவோறே பணம் சம்பாதிக்கக்கூடியதொழிற்றுறையிது.

மகளிர் அமைப்புக்கள், சங்கங்கள் இவ்விடயத்தில் கரிசனை செலுத்துவது நல்லது. மகளிர் அமைப்புக்களால் பலரை இணைத்து வேலைவாய்ப்புடனான இவ்வாறான தொழிற்றுறையை ஆரம்பிக்கலாம்.

பல்வேறு வைபவங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் இயற்கையான மலர்களையும் தாவர இலைகளையும் பயன்படுத்துவதை நிறுவனங்களிலும் வைபவங்களிலும் இயற்கையான பூக்களைப் பயன்படுத்துவதை விருப்பாக நாம் நடைமுறைப்படுத்தினால் இம்மாதிரியான தொழிற்றுறைக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பாக இருக்கும்.

வடபகுதி அபிவிருத்திக்கு நாமும் என்ன செய்யப் போகின்றோம் என்பதனை ஒருகணம் சிந்திப்போமானால் எம்மாலும் இவ்வாறான தொழிற்றுறையை வளர்த்தெடுக்க முடியும்.

வடபுலத்திலிருந்து மலர்களும் வண்ண இலைகளும் தாவரங்களும்வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாகும் காலம் கனிந்து வரும் போது எமது மக்களுடைய சூழலை பாதுகாப்பதற்கான வாய்ப்பாகும்.

வீட்டுத் தோட்டங்களில் அழகுத் தாவரங்களையும் சேர்த்து வளர்க்கலாம். இத் தொழிற்று

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 169


அளவுக்கு குறைந்து விட்டுள்ளது.

குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் மலர்கள் மற்றும் வர்ண இலைகளை பல்வேறு வைபவங்களுக்காக வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்கின்றனர். எமது நாட்டிலிருந்தும் இந்நாடுகளுக்கு மலர்கள் மற்றும் அழகுக்காக வைக்கப்படும் இலைகள் என்பன ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தற்போதுள்ள சூழ்நிலையில் இவ்வாறு ஏற்றுமதி செய்வதனை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை நாம் இனங்கண்டு இத்தொழிற்றுறை மேலும் விரிவடைவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கைதடிப் பகுதியில் மல்லிகை பாரியளவில் வளர்க்கப்படுகின்றது.

இதற்கான தொழில்நுட்பத்தை பெற்றுக் கொண்டால் அதுவும் அனுபவமூடாக அறிந்து கொண்டால் இலாபமீட்டும் தொழிலாக இதனை விருத்தி செய்வது இலகுவானதாகும்.

மேலும் சந்தை வாய்ப்பு கைகளை நாம் விரைந்து எடுத்தாக வேண்டும்.



இங்கு குறிப்பிடத்தக்க விடயம் எதுவெனில், வடபகுதியில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் மகளிருக்கான வேலை வாய்ப்பை உருவாக்கவும் இவ்வகையான தொழிற்றுறையை வடபகுதியில் மேம்படுத்தவும் இம்மாநாட்டில் கலந்துரையாடப்பட்டது.

வடபகுதியில் பெண்களினால் ஊக்குவித்தால் நம்மூரிலும் இவற்றினது பயன்பாட்டை அதிகரிக்கலாம். பிளாஸ்ரிக்கிலான பூக்களை வடபகுதி பெண்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு இயற்கையான பூக்களையும் வண்ண இலைகளையும் உற்பத்தி செய்யும் தொழிற்றுறை கைகொடுக்கும்.

மேலும் செயற்கையான பூக்களை குறிப்பாக பிளாஸ்ரிக்கிலான பூக்களைப் பயன்படுத்துவதனை நாம் எல்லோரும் தவிர்க்க வேண்டும்.

தொழிற்றுறை இன்னும் மேன்மையுறும். தற்போது பலர் இவ்வாறான நாற்றுமேடைகள் கொண்ட பூங்காக்களை நெடுஞ்சாலையோரமாக அங்குமிங்குமாக உருவாக்குவதனை நாம் அவதானிக்கலாம்.

இவ்வாறான தொழிற்றுறைக்கு கைகொடுத்து அவர்களது அழகுத் தாவரங்களை மக்கள் வாங்குவதை ஊக்குவிப்பதும் இந்ததொழிலுக்கான முன்னேற்றமான விடயமாகும்.

இயற்கையை அனுசரித்து இயற்கையை மேம்படுத்தி இயற்கையுடன் வாழும் வாழ்க்கைக்குள் நாம் எம்மைப் பழக்கிக் கொள்ள வேண்டும். இத்தாவர சங்கமத்துள் என மணிவாசகப் பெருமான் விளித்ததை நாம் எமது தாரக மந்திரமாகக் கொண்டு இயற்கையை முன்னிலைப்படுத்தும் இவ்வாறான கைத்தொழிற்றுறையை முன்னேற்றுவதற்கான ஆக்கபூர்வமான வழிகளை நாம் விரைந்துகண்டு அதனை நடைமுறைப்படுத்தவும் வேண்டும்.

வீட்டுத்தோட்டங்களில் அல்லது தோட்டங்களில் பூக்கும் தாவரங்களை வளர்க்க ஊக்குவிப்பது றையை வீட்டுத் தோட்டங்களில் சிறிதாக ஆரம்பித்து பின்னர் அதனது தேவையைப் பொறுத்து விசாலமாக்கலாம்.

இத் தாவரங்களை தென் பகுதியிலிருந்து பலர் எடுத்து வந்து விற்பனை செய்கின்ற நிலையில் எமது பிரதேசத்திலுள்ள தாவரங்களைப் பாதுகாக்கவும் அவற்றின் பயன்பாட்டைப் பெறவும் நாம் வீட்டுத் தோட்டங்களில் இவற்றை வளர்க்க ஆரம்பித்து பின்னர் கேள்வி அதிகமாகவுள்ள தாவரங்களை பெருக்கிக் கொள்ளலாம்.

வீட்டுத்தோட்டங்களை பூக்கள் நிறைந்த தாவரங்கள் கொண்டதாக மாற்றும் போது அவற்றை நோக்கி மகரந்த சேர்க்கையிலீடுபடும் பூச்சியினங்கள் மற்றும் தேனீக்கள் என்பன வருகைதரும்.

இதன்மூலம் நன்மைதரும் பூச்சியினங்களைப் பாதுகாக்கவும் விருத்தி செய்யவும் வாய்ப்பேற்படும். எமது உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பாகும்.



ஐக்கிய இராச்சிய கோண்டாவில் நலன்புரிச்சங்க நிதி அனுசரணையில், கோண்டாவில் மக்கள் நலன்பேணும் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டு வரும் கல்விக்கான நிதியுதவி வழங்கும் செயற்றிட்டத்தின் மூன்றாம் கட்ட மாதாந்த நிதியுதவித்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலையில் கோண்டாவில் மக்கள் நலன்பேணும் அமைப்பின் தலைவர் செ.ஜெகபாலன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு மாணவர்களுக்கான நிதியுதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேசசபைத் தவிசாளர், தா.தியாகமூர்த்தி, யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, பேராசிரியர் க.தேவராஜா மற்றும் கோண்டாவில் மக்கள் நலன்பேணும் அமைப்பின் செயலாளர் செ.தனுஷன், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

## வர்த்தக நிலையங்களை மூடி துக்கதினம் அனுஷ்டிப்பு




படங்கள்: பொ.சோபிகா, மகாலிங்கம், குருநகர் செய்தியாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளின் கண்ணீரில் மூ




















ஈழத்தில் ஈவு இரக்கமின்றி இல
டதை நினைவுகூர்ந்து முள்ளிவாய்க்
சம் பெற்ற முள்ளிவாய்க்காலில் நே
வடக்கு மாகாண முதலமைச்சர்
பல்கலைக்கழக மாணவர்கள் மற்று
புடன் உணர்வுபூர்வமாக இடம்பெற்ற
விக்னேஸ்வரன், இறுதிப் போரில்
பிரதான சுடரை வழங்கி ஏற்றி வைத்
இதனையடுத்து ஏனையோரு
ஏற்றினர். முதலமைச்சர் விக்னே
பிரகடனத்தை வெளியிட்டார்.

(படங்கள்:- உ.சாளின்
செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ழ்கியது முள்ளிவாய்க்கால்































இலட்சக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட் ாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இறுதிப்போர் உச் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது. ச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் யாழ். ற்றும் பல்லாயிரக்கணக்கான மக்களின் பங்கேற் ற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் முதலமைச்சர் ரில் உறவுகளை இழந்த பெண்ணொருவரிடம் வத்தார்.

ாரும் தமது உறவுகள் நினைவாக சுடர்களை னேஸ்வரன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

**ன், பனிக்கன்குளம், கிளிநொச்சி ,**
**ெய்தியாளர்கள்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரும் செந்நீரும் கலந்த கடலன்னையை வணங்கி உயிர்நீத்த உறவுகளுக்கு மலர்தூவி அஞ்சலித்தேன்



(முல்லைத்தீவு)

"எங்கள் பெருமைமிகு வரலாற்றின் சோகமான இறுதிக் காட்சிகளின் மௌனமான சாட்சியே இந்த நந்திக் கடல். ஏராளமான எங்கள் உறவுகளின் கண்ணீரும் செந்நீரும் கலந்துள்ள இந்தக் கடலன்னையை வணங்கி, உயிர்நீத்த எங்கள் உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலித்தேன்.."என வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இன அழிப்பு போரில் உயிர் நீத்த உறவுகளுக்காக மலர் தூவி அஞ்சலித்த வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்தோடு திட்டமிட்டபடி நேற்றுக் காலை வடக்குமாகாண சபையால் ஒழுங்கமைக்கப்பட்ட உயிர் நீத்த எமது உறவுகளுக்கான நினைவேந்தல் நிகழ்வு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் திடலில் நடைபெறும் என்பதையும் தெரிவித்தார். (2)

# வவுனியா கருமாரியம்மன் ஆலயத்தில் விளக்கேற்றி, ஆத்மசாந்தி பிரார்த்தனை





(குருமன்காடு)

வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா கருமாரியம்மன் ஆலயத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கடந்த 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் மண்ணில் மரணித்த தமிழர் தம் உறவுகளை நினைவுகூரும் முகமாக விளக்குகள் ஏற்றப்பட்டதுடன், ஆத்ம சாந்தி பூஜையும் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், கிழக்கு மாகாண முன்னாள் மாகாணசபை உறுப்பினர் கருணாகரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோதராதலிங்கம், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், வவுனியா உப-நகர பிதா குமாரசாமி மற்றும் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன், செயலாளர் மாணிக்கம் ஜெகன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# இன அழிப்பின் 9 ஆம் ஆண்டு நினைவேந்தல்

# மன்னாரில் வர்த்தக நிலையங்களை மூடி நகர சபை மண்டபத்தில் மலர்தூவி அஞ்சலி







(மன்னார்)

முள்ளிவாய்க்கால் இன அழிப்பின் 9 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த உறவுகளுக்காக சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டு ஆத்ம சாந்திக்காக சர்வமத பிரார்த்தனைகளும் இடம் பெற்றன.

இதனைத்தொடர்ந்து அஞ்சலி உரைகளும் இடம் பெற்றன. நினைவேந்தல் நிகழ்வில் சர்வமத தலைவர்கள், மன்னார் நகர சபையின் தலைவர், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், வர்த்தகர்கள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர்களின் உறவுகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதே வேளை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நினைவுகூரும் வகையில் மன்னார் பஸார் பகுதியிலுள்ள அதிகளவான வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் நேற்றுக் காலை முதல் மதியம் வரை மூடி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நினைவு கூர்ந்துள்ளனர்.

நேற்றைய தினம் பாடசாலைகளுக்கு மாணவர்களின் வரவு குறைவாகக் காணப்பட்ட தோடு, மக்களின் நடமாட்டமும் நகரில் குறைவடைந்து காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)







முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் தமிழினப் படுகொலையில் உயிர் நீத்தவர்களை நினைவுகூரும் வகையில் தீபமேற்றிய ஊர்த்திப் பவனி நேற்றுக் காலை முள்ளிவாய்க்காலைச் சென்றடைந்தது. (2)

# உயிர்நீத்த உறவுகளுக்கு அந்தணர் ஒன்றியத்தினால் வவுனியாவில் அஞ்சலி நிகழ்வு





(குருமன்காடு)

முள்ளிவாய்க்கால்நினைவு தினம் வடக்கு, கிழக்கு பிரதேசமெங்கும் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிலையில் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தினால் நேற்று குருமன்காடு சித்தி விநாயகர் ஆலயத்தில் அஞ்சலி பிரார்த்தனை நிகழ்வு இடம்பெற்றது.

அந்தணர் ஒன்றியத்தின் செயலாளர் மயூரசர்மா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முத்து ஜெயந்தி நாதக் குருக்கள் ஆத்மசாந்தி பிரார்த்தனையை நடத்தியிருந்தார்.

இதனையடுத்து அஞ்சலிச்சுடர்கள் ஏற்றப்பட்டதை அடுத்து இறந்த ஆத்மாக்களுக்காக பொதுமக்கள், அந்தணர்கள், ஆலய நிர்வாகத்தினர் ஆகியோர் நெய் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர். (2-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டில் வீதி விபத்துக்களால் நாளொன்றுக்கு எட்டு பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றுவரும் வீதி விபத்துக்களால் நாளொன்றுக்கு எட்டுப் பேர் பலியாவதாக வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவர் டாக்டர் சிசிர கோத்தாகொட தெரிவித்தார்.

மூன்று மணித்தியாலங்களுக்கு ஒருவர் வீதம் வீதி விபத்துகளால் உயிரிழக்கின்றனரெனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

வீதி விபத்துக்களால் ஏற்படும் மரணங்களுக்கு அப்பால், தற்காலிகமாக அல்லது நிரந்தமாக அவயவங்கள் இழப்புக்கு உள்ளான பலரது குடும்பங்கள், பாதிப்பை எதிர்நோக்கி உள்ளனவெனவும் அவர் சுட்டிக்காட்டினார்."கடந்த வருடம் இலங்கையில் ஏற்பட்ட வீதி விபத்துக்களால், 3,100 பேர் பலியானதுடன் 4,320 பேர் அங்கவீனர்களாகியுள்ளனர்.

"வாகனங்களை அதிக வேகத்துடன் செலுத்துதல், வீதிச்சட்டங்களை மீறுதல், போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்ட பின்னர் வாகனங்களைச் செலுத்துதல், தொலைபேசியில் உரையாடியவண்ணம் வாகனங்களைச் செலுத்துதல், வாகனங்களை செலுத்தும் போது வெற்றிலை உண்ணுதல் போன்ற இன்னும் பல காரணங்களே, வீதி விபத்துக்கள் ஏற்படக் காரணமாகியுள்ளன" என்றும் கோத்தாகொட குறிப்பிட்டுள்ளார்.

இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டப் பொலிஸ் நிலையங்களில் பெறப்பட்ட தகவல்களுக்கமைய, சப்ரகமுவ மாகாணத்திலேயே விபத்துக்கள் அதிகரித்துள்ளன எனச் சுட்டிக்காட்டிய அவர், வீதி விபத்துக்களைத் தடுப்பதற்காக, வீதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, விபத்துகளைக் குறைப்பது தொடர்பான அலுவலகம் ஒன்று சப்ரகமுவ மாகாணத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (இ-7)

# ஊவா மாகாணத்தின் புதிய ஆளுநர் உத்தியோகபூர்வமாக கடமையேற்பு



(கொழும்பு)

ஊவா மாகாண புதிய ஆளுநராக ஆரியபண்டார ரெகவ நேற்று முன்தினம் காலை உத்தியோகபூர்வமாக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க, ஊவா மாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் ஆர்.எம். ரத்நாயக்க, ஊவா மாகாண சபை அமைச்சர் உபாலி டெல்டன் சமரவீர உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (இ-7)

# சு.கவுக்கு ஜூன் 3 ஆம் திகதி தற்காலிக நிர்வாகக்குழு



## டிலான் பெரேரா தகவல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய நிர்வாக சபைக்குப் பதிலாக எதிர்வரும் 3 ஆம் திகதி தற்காலிக நிர்வாக சபையொன்றை நியமிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் கூடிய போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இக்கூட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் ஸ்ரீல.சு.கயின் ஊடகப் பேச்சாளர் டிலான் பேரேரா இதனைக் கூறியுள்ளார்.

அடுத்த மாதம் 3 ஆம் திகதி கட்சியின் நிறைவேற்றுக் குழு கூடி, இந்த தற்காலிக நிர்வாகக் குழுவை நியமிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தற்காலிக நிர்வாக சபை நியமிக்கப்பட்டதன் பின்னர் எதிர்வரும் டிசெம்பர் 2 ஆம் திகதிக்கு முன்னர் கட்சியின் பொறுப்புக்கள் மறுசீரமைக்கப்படும் எனவும் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவிதார்.

ஸ்ரீல.சு.கயின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்கவும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமர வீரவும் தமது கட்சிப் பொறுப்புக்களிலிருந்து விலக வேண்டும் என அரசாங்கத்திலிருந்து வெளியேறிய 16 பேரும் கட்சியின் தலைமைக்கு அழுத்தம் பிரயோகித்து வருகின்றனர். இந்த நிலையிலேயே கட்சியின் பொறுப்புக்களில் மாற்றம் செய்ய வேண்டும் என்ற கருத்துக்கள் கட்சிக்குள் நிலவி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய அவகாசம்



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு ஜூன் மாதம் 12ஆம் திகதி வரை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் அவகாசம் வழங்கியுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த காலத்தில் கரம்போர்ட் கொள்வனவு செய்த போது 53 மில்லியன் நிதியை தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி வழக்கு விசாரணை நேற்று முன்தினம் இடம்பெற்ற போது மகிந்தானந்த அளுத்கமகே நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

இந்த சம்பவத்தில் இரண்டாவது சந்தேகநபராக பெயரிடுவதற்கு முன்னாள் சதொச தலைவர் நலின் பெர்னாண்டோவிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டிருப்பதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நீதிமன்றில் தெரிவித்தது.

அதன்படி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு கால அவகாசம் கோரியதையடுத்து நீதிமன்றம் ஜூன் மாதம் 12 ஆம் திகதி வரை அவகாசம் வழங்கி உத்தரவிட்டுள்ளது. (இ-7)

# இலங்கை அகதிகள் உட்பட 476 பேர் துருக்கியில் கைது

(கொழும்பு)

இலங்கையர் உள்ளிட்ட 476 சட்டவிரோத குடியேற்றவாசிகள், துருக்கியில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக துருக்கி இணையத்தளமான நியூஸ் ஒன் துருக்கி (news on turkey) செய்தி வெளியிட்டுள்ளது. நேற்று முன்தினம் துருக்கியைக் கடக்க முற்பட்ட சுமார் 476 சட்டவிரோத குடியேற்றவாசிகளை அந்நாட்டு பாதுகாப்புப் படையினர் தடுத்து நிறுத்தியுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் கைது செய்யப்பட்ட சட்டவிரோத குடியேற்றவாசிகளில் இலங்கையரும் அடங்குவதாக தெரியவந்துள்ளது.

துருக்கி நாட்டின் கிழக்கே எலாசிக் (Elazig) மாகாண எல்லையில் புதிய மனிதர்கள் சிலர் நடமாடுவதாகக் கிடைத்த தகவலுக்கு அமைய, எலாசிக் - பிங் கோல் (Bingol) பிரதான வீதியில் பயணித்த 22 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இவர்கள் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் எனத் [illegible] (இ-7)

## இன்று ஒரு தகவல்

# நொடியில் மாறுகிறவர்கள்!

இந்த மனிதர்கள்தாம் எவ்வளவு முரண்பாடானவர்கள்!கண்ணுக்குத் தெரிகின்ற அனைவரையும் கன்னாபின்னாவென்று பாராட்டிவிட்டு, அவர்கள் அப்படி நகர்ந்ததும் எவ்வளவு முரண்பட்டுப் பேசுகிறார்கள் தெரியுமா!

நீங்கள் போட்டிருக்கும் சட்டை பிரமாதம் என்கிறார்கள் முகத்திற்கு முன்னால். இவனும் இவன் இரசனையும்! என்கிறார்கள் முதுகிற்குப் பின்னால். "நீங்க எடுத்த முடிவு ரொம்பச் சரி" என்கிறார்கள் (மு.மு.) பார்த்துக் கொண்டே இருங்கள்; இவன் எடுத்த முடிவு இவனை எப்படிக் கவிழ்க்கப் போகிறது!"என்கிறார்கள். (மு.பி).

"சமையல் பிரமாதம்" என்கிறார்கள். (மு.மு.). "மனிசன் சாப்பிடுவானா அதை?" என்கிறார்கள் (மு.பி.). பிடிக்காவிட்டால் சும்மா இருக்கலாமே? எதற்காக இரண்டையும் சொல்லித் தொலைக்க வேண்டும்? 100இற்கு 100 புரட்டிப் பேசுகிற பழக்கம் என்ன பழக்கம்?

முதல் வாக்கியத்தின் போது நாக்கில் தேனைத் தடவிக் கொண்டு பேசும் மனிதர்களால் எப்படி நொடியில் நெருப்புத் துண்டங்களைக் கக்க முடிகிறது?

இந்த முறையற்ற முரண்பாட்டை எப்போதுதான் கைவிடப் போகிறோம்?

நேரில் சொல்லத் தைரியம் இல்லாத கோழைகளால் முகம் காணாத போது எப்படித் துணிவை வரவழைத்துக் கொள்ள முடிகிறது.

மற்றவர் மனம் நோகக்கூடாதே என்றுதானே அவர்கள் விரும்பும்படி பேசுகிறோம்? ஆனால் அவர்களது முதுகிற்குப் பின்னால் நாம் பேசியது அவர்கள் காதுக்கு எப்படியோ போய்ச் சேர்ந்து அவர்கள் ரொம்பவும் புண்பட்டுப் போவதை நாம் ஏன் பொருட்படுத்துவது இல்லை? முகத்துக்கு நேரே சொன்னால் அவர்களும் பதிலுக்குச் சூடு கொடுப்பார்கள் என்கிற பயமா?

இந்தப் பழக்கத்திலிருந்து எப்படி விடுபடுவது? இதற்கு மூன்று வழிகள் உள்ளன.

எதையும் மிகைப்படுத்தாமல் இருப்பது முதல் வழி.

இந்த முரண்பாடான பேச்சு நமக்குக் கெடுதலையே செய்யும் என்று தீர்மானமாக நம்புவது இரண்டாவது வழி.

மற்றவர்களைக் காயப்படுத்தி விடக்கூடாது என்று தீர்மானம் செய்து கொள்வது மூன்றாவது வழி.

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரச படைகள் மனிதவுரிமை மீறல் விவகாரம்

# ஐ.நா.சபையின் கொள்கைகளை இலங்கை பின்பற்ற வேண்டும்

## பேச்சாளர் பர்ஹான் வலியுறுத்து

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகளின் அமைதிப்படைகளில் இலங்கை படையினர் இடம்பெற வேண்டும் என்றால் இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் கொள்கைகளை பின்பற்ற வேண்டும் என ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் பிரதிப்பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.




ஜெனிவாவில் செய்தியாளர் நேற்று கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

லெபனானில் பணியாற்றும் ஐ.நா. அமைதிப்படையில் இடம்பெற்றுள்ள 49 இலங்கை படையினர் கடந்த காலங்களில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனரா? என்பது குறித்து ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு இது குறித்து ஆராய்ந்து வருகின்றது எனத் தெரிவித்துள்ள ஐ.நா. பேச்சாளர் அமைதிப் படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ள ஏனைய 101 படையினரின் கடந்த காலங்கள் குறித்தும் இலங்கை மனித உரிமை ஆணைக் குழு ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினர் படையினரின் கடந்த காலங்கள் குறித்து விசாரணை செய்யும் போது ஐ.நா.வின் கொள்கையை பின்பற்றுகின்றனர் என்பதை உறுதி செய்வதற்காக இலங்கையுடன் ஐ.நா. இணைந்து செயற்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் படையினருக்கு அமைதிப்படையில் எதிர்காலத்தில் இடமளிக்கப்படவேண்டும் என்றால் இலங்கை ஐ.நா.வின் விதிமுறைகளை பின்பற்றுவது அவசியம் எனவும் பர்ஹான் ஹக் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



## வாகனத் தரிப்பிடங்களில் அபராதம் இனி இல்லை

### முதல்வர் ரோஸி அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் வாகனங்களை தரிப்போருக்கு தானியங்கி இயந்திரங்கள் மூலம் கட்டணங்கள் அறவிடப்படும் நடைமுறை தற்போது உள்ளது.

எனினும் இந்த கட்டணங்களை செலுத்தாத நபர்களுக்கு அறவிடப்படும் அபராதத் தொகையை விதிக்காது இருக்கும் நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள கொழும்பு மாநகர சபை முதல்வர் ரோஸி சேனநாயக்க தீர்மானித்துள்ளார்.

இதற்கான அனுமதியை மாநகர சபை ஊடாக பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் கொழும்பு மாநகர சபை முதல்வர் ரோஸி தெரிவித்தார். (இ-7)

## பசிலுக்கு எதிரான வழக்கை விசாரிக்க் விதித்த தடை நீடிப்பு



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் விசாரிப்பதை தடுத்து நிறுத்தி வழங்கப்பட்டுள்ள தடையுத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் செப்டெம்பர் 11 ஆம் திகதி வரை நீடித்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் திவிநெகும திணைக்களத்திற்கு சொந்தமான இரண்டு கோடியே 94 இலட்சம் பணத்தை செலவிட்டு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புகைப் படத்துடன் கூடிய 50 இலட்சம் நாட்காட்டிகளை அச்சிட்டு விநியோகித்ததாக பசில் ராஜபக்ஷவுக்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கை தொடர்ந்துள்ளார்.

வழக்கு தொடர்பான விசாரணைகளை எதிர்வரும் செப்டெம்பர் 10 ஆம் திகதி நடத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குமுதினி விக்கிரமசிங்க மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் தடையுத்தரவை நீடித்து நேற்று உத்தரவிட்டுள்ளனர்.

சில் துணி தொடர்பான வழக்கில் தீர்ப்பை வழங்கிய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க கடந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சித்துள்ளதாக பசில் ராஜபக்ஷ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியுள்ளார்.

இதன் மூலம் நீதிபதி கிஹான் குலதுங்கவின் பக்கசார்பு புலப்பட்டுள்ளதால், கடந்த அரசாங்கத்தின் அமைச்சர் என்ற வகையில் தனக்கு எதிராக வழக்கு கிஹரன் குலதுங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டால், நீதியை எதிர்பார்க்க முடியாது. எனவும் பசில் தனது மனுவில் கூறியுள்ளார்.

இதனால், தனக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ள வழக்கை கிஹான் குலதுங்கவுக்கு பதிலாக வேறு ஒரு நீதிபதியின் கீழ் விசாரணைக்கு எடுக்குமாறு உத்தரவிட வேண்டும் எனவும் பசில் தனது மனுவில் கோரியுள்ளார். (இ-7)

# கயிலாச யாத்திரை


## ஓர் அனுபவப் பகிர்வு 49

பரமசாமி பஞ்சாட்சரம்

- அருணகிரிநாதர் திருப்புகழில் திருக்கோணேஸ்வரம்-கி.பி.1468.
- போர்த்துக்கேயர் திருகோணமலையில் ஆட்சி-(கி.பி. 1622-1639).
- ஒல்லாந்தர் திருகோணமலையில் ஆட்சி-(கி.பி. 1639-1782).
- பிரித்தானியர், பிரான்சியர் திருகோணமலையில் ஆட்சி-(கி.பி.1782-1815).
- பிரித்தானியர் திருகோணமலையில் ஆட்சி-(கி.பி. 1815-1948).
- இலங்கை அரசாங்கத்தின் ஆட்சி 1948 ஆம் ஆண்டிலிருந்து தொடருகின்றது.
- திருக்கோணேஸ்வர ஆலய புனருத்தாரண அமைப்பு ஆரம்பம் 1950 ஆம் ஆண்டு.
- கோணேசர் விக்கிரகங்கள் (பிள்ளையார், கோணேசர், மாதுமை அம்மன், போக சக்தி) 10ஆம் குறிச்சியில் எடுக்கப்பட்டது. 27.07.1950.
- முதலாவது கும்பாபிஷேகம்-03.04.1963.
- புதிய பரிபாலன சபை ஆரம்பம்-01.07.2010.
- சிவன் சிலை (33 அடி உயரம்) திறப்பு-15.12.2011.
- சோழர் காலத்து நந்தி கண்டெடுக்கப்பட்டது-22.01.2013.
- அண்மையில் நடைபெற்ற கும்பாபிஷேகம்-11.02.2015.

### தெட்சண கயிலாசத்திற்கு ஏற்பட்ட அழிவு

புராணங்களில் சித்திரிக்கப்பட்ட இக்கோவில் கி.மு. 1300 ஆம் ஆண்டில் இலங்கை அரசன் மனுசாராசனாற் புதுப்பிக்கப்பட்டது. கி.பி. 436 ஆம் ஆண்டில் குளக்கோட்டு மன்னனாலே ஆயிரம் கால் மண்டபமும் கோயிலும் தனிக் கற்களாலே கட்டப்பட்டுக் காலத்துக்குக்காலம் பாண்டிய மன்னர்களாலும் பல்லவ அரசர்களாலும் சோழ அரசர்களாலும் திருத்தப்பட்டு பின் வந்த அரசர்களாலும் புதுப்பிக்கப்பட்டு இருந்தமையைச் சரித்திரம் கூறுகிறது.



போர்த்துக்கேய படைத் தளபதி கொன்ஸ்டன் டைன் டீசா கோயில்களை இடிக்க முன்பு கோயில்களைப் பல கோணங்களில் வரைந்ததுடன் எத்தனை பெரிய தனிக்கற்களை எடுக்கலாம் என்பதையும் கணக்கிட்டு எழுதிப் போர்த்துக்கேய அரசனுக்கு எல்லா விபரங்களையும் அனுப்பியதுடன் கோவிலை இடிப்பதற்கு அனுமதி கேட்டும் ஒரு விண்ணப்பத்தை அனுப்பியிருந்தான். 1623 ஆம் ஆண்டிற்கு முன் இருந்த மூன்று கோவில்களையும் திருக்கோணேஸ்வரத்தின் இராசகோபுரங்களையும் மதில்களையும் அடக்கிய மாதிரி வரைபடத்தைக் கீழே படத்தில் பார்க்கவும்.

அரசனுடைய அனுமதி கிடைத்த பின் 1624 ஆம் ஆண்டு போர்த்துக்கேய படைத் தளபதி கொன்ஸ்டன் டைன் டீசாவும் அவனது ஆட்களும் சவாமி மலையிலுள்ள மூன்று பெரிய கோவில்களில் இருந்த திரவியங்களைக் (பொன், இரத்தினக் கற்கள், ஆபரணங்கள்) கொள்ளையடித்தார்கள். பின் அழகிய தனிக் கற்களாற் கட்டப்பட்ட ஆயிரங்கால் மண்டபம், இராசகோபுரங்கள், கோயில் கட்டடங்கள், மதில்கள், வீதிகள் ஆகியவற்றில் இருந்த எல்லாத் தனிக்கற்களையும் எடுத்துத் திருகோணமலைக் கோட்டையைக் கட்டினார்கள். சில விக்கிரங்களையும் சிலைகளையும் பாவநாசக் குளத்திலும் வேறு கிடங்குகளிலும் போட்டு மூடி எஞ்சிய விக்கிரங்களையும் சிலைகளையும் கடலிற்குள் வீசி விட்டார்கள் என்றும் சரித்திரம் கூறுகின்றது.

கோயில் இடிக்கப்பட்ட பொழுது கோவிலைப் பராமரித்தவர்களும் இறைவன் பால் அருள் கொண்ட தொண்டர்களும் தங்கள் உயிரையும் பாராது மறைமுகமான ஆலயத்தின் சில தொன்மங்களை (முக்கியமான விக்கிரங்களையும் எடுக்கக் கூடியவற்றையும்) எடுத்துத் தங்கள் இல்லங்களிலும் குளக்கரைகளிலும் (புதைத்து) மறைத்து வைத்தனர். அக்காலத்தில் கோவில் இருந்த இடத்திற்கு மக்கள் செல்ல அரசு அனுமதி கொடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### போர்த்துக்கேயச் சரித்திரமும் கல்வெட்டுகளும்

டி கியுறோஸ் (De Quieroz) எனப் பெயர்கொண்ட போர்த்துக்கேய எழுத்தாளர் ஒருவர் தங்கள் சரித்திர நூலில் பின்வருமாறு எழுத்தியுள்ளார். "கொன்ஸ்டன் டைன் டீ சா என்னும் படைத்தளபதி திருகோணமலைக் கோயிலை இடித்து அக்கற்களைக் கொண்டு கோட்டை கட்டும் போது பல கல்வெட்டுக்களைக் கண்டான் எனவும் அதில் இலங்கை அரசன் மனுராசன் இவ்வாலயத்தை வீதியா மண்டா என்ற தெய்வத்திற்காக கி.மு. 1300 ஆம் ஆண்டில் கட்டுவித்தான் எனவும் பறங்கியர் அதனை இடிப்பர், பின்பு இத்தீவில் அவற்றைக் கட்டுவதற்கு அரசன் இருக்க மாட்டான் எனவும் அதிலே எழுதப்பட்டிருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தை முடித்ததாக மார்தட்டும் அரசாங்கம் வடக்கின் அழிவுகளுக்கு பதிலளிக்க வேண்டும்

## ஜே.வி.பி.தலைவர் அநுர எம்.பி.வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கின் ஜனநாயகச் செயற்பாடுகள் அனைத்தையும் சீரழித்து யுத்தம் ஒன்றை உருவாக்கியது நிறைவேற்று ஜனாதிபதி முறைமையைக் கொண்டு செயற்பட்ட அரசாங்கமேயாகும் எனவும் யுத்தத்தை முடித்ததாக மார்தட்டிக்கொள்ளும் அரசாங்கம் வடக்கின் அழிவுகளுக்கு பதில் கூற வேண்டும் எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று சிவில் சமூக பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிறைவேற்று ஜனாதிபதி மூலம் முன்னெடுக்கப்படும் சர்வாதிகார நகர்வுகள் துண்டிக்கப்பட வேண்டும்.

அத்துடன் தனி ஒரு இடத்தில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். இன்று அமைச்சரவையில் சர்வாதிகாரம் குவிந்து கிடக்கின்றது. இதனால் முழுமையான அதிகார துஷ்பிரயோகமே அமைச்சரவையில் இடம்பெறுகின்றது.

நாட்டில் யுத்தம் ஒன்று உருவாகுவதற்கு நிறைவேற்று ஜனாதிபதி முறைமையே காரணமாக அமைந்தது.

வடக்கில் ஜனநாயக ரீதியாக நடைபெறவிருந்த தேர்தலைக் கூட நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் மூலமாக தடுத்தனர்.

1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை கலவரம் எவ்வாறு தலைதூக்கியது. அப்போது ஜே.ஆர்.ஆட்சிக்கு எதிரான அழுத்தங்கள் எழுந்து நெருக்கடிகள் அனைத்திற்கும் பதில் கூறக்கூடிய நிலைமை இருக்கவில்லை.

அவர்களுக்கு எதிராக இடதுசாரி சக்திகள் முன்னோக்கி பயணித்துக் கொண்டு இருந்தது.

ஆகவே அவருக்கு எதிரான நெருக்கடிகளை வேறு திசைக்கு திருப்ப வேண்டிய தேவை ஜே.ஆருக்கு தேவைப்பட்டது.

அதற்காகவே அன்று கறுப்பு ஜூலை கலவரத்தை அரசாங்கம் கையாண்டது.

இவை களே இலங்கையில் யுத்தம் ஒன்று உருவாக பிரதான காரணியாக அமைந்தது. 1981-1983 காலம் வடக்கில் தமிழ் மக்கள் வேறு வழியில் லாது ஆயுதத்தை கையில் ஏந்தவேண்டிய நிலை உருவானது.

தமது கண்முன்னே அவர்களின் உறவுகளை கொன்று, கொடுமைப்படுத்தியமை, டயர் கொண்டு பொது மக்களை எரித்தமை, அத்துடன் யாழ்.மக்களின் இதயமாக இருந்த நூலகத்தை தீக்கிரையாக்கியமை போன்ற பல சம்பவங்கள் இன்றும் எம் கண்முன்னே வந்து போகின்றன.

ஆகவே யுத்தத்தை வெற்றி கொண்டதாக மார்தட்டிக் கொள்ளும் சிங்கள தலைவர்களே இந்த நாட்டில் யுத்தம் ஒன்றினை உருவாக்கினர். அதற்கு பிரதான காரணம் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1417

Search for people, places and things Nagendram Home

### ரம்யா

சைக்கிள் கற்றுத்தர அப்பா நம்மிடம் காட்டிய பொறுமையை



நாம் அவருக்கு தொலைபேசி கற்றுக் கொடுப்பதில் காட்டுவதில்லை!

### ரேஷ்மா


பாறைகளின் இடுக்குகளில் வளர்வது தாவரம் அல்ல? தன்னம்பிக்கை...



தேன்கூட்டில் இருப்பது தேன் அல்ல உழைப்பு!

### மேக்னா

நீ முயற்சி செய்யும் போது வீண் முயற்சி என்று சொன்னவர்கள்



நீ வெற்றி பெற்ற பின் அதையே விடாமுயற்சி என்று சொல்வார்கள்

### ரவீனா

உங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு நொடியையும் ரசித்து வாழுங்கள்...



ஒருநாள் கடந்து வந்த பாதையில் மிகப்பெரிய சந்தோசம் காத்திருக்கும்...!

### சுஜாதா

வாழ்க்கை ஒவ்வொரு நொடியும் மாறிக்கொண்டுதான் இருக்கின்றது



ஆனால்... நாம்தான் அந்த மாற்றத்திற்கு தயாராக இல்லை

### ஸ்ரீநிவாஸ்

தன்னம்பிக்கையும் தைரியமும் நிறைந்த ஒருவர்



யாரிடமும் எப்பொழுதும் மண்டியிடுவதுமில்லை கையேந்துவதுமில்லை...!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரியா - அமெரிக்கா சந்திப்பு இரத்து சீனா மடைமாற்றியிருக்கலாம் என ட்ரம்ப் சந்தேகம்

(வோஷிங்டன்)

வடகொரிய ஜனாதிபதி கிம் யாங் உன் - அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சந்திப்பு அடுத்த மாதம் நடக்க திட்டமிட்டிருந்த நிலையில், திடீரென இதில் இருந்து வடகொரியா பின்வாங்க முயன்று வருகிறது.

வடகொரிய ஜனாதிபதி கிம் யாங் உன் - அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஆகிய இருவரும் அடுத்த மாதம் 12ஆம் திகதி சிங்கப்பூரில் சந்திக்க திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக அமெரிக்க தரப்பில் இருந்து சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அணு ஆயுத சோதனை கூடங்களை தகர்க்க வேண்டும்.

கைவசம் உள்ள அணு ஆயுதங்களை அழிக்க வேண்டும் போன்ற பல நிபந்தனைகள் முன்வைக்கப் பட்டன.

அணு ஆயுத சோதனை கூடங்களை அழித்து விட்ட வடகொரியா, சில நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. இதற்கிடையே, தென்கொரியாவுடன் சமீபத்தில் நடக்க இருந்த சந்திப்பை வடகொரியா இரத்து செய்தது. ட்ரம்ப் உடனான சந்திப்பு முடிவில் இருந்து விலகுவோம் என எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் இது தொடர்பாக ட்ரம்ப் தெரிவிக்கையில்,

பொறுத்திருந்து என்ன நடக்கிறது என்பதை பார்ப்போம்.

அது நடக்கலாம். நடக்காமல் போகலாம். எப்படி இருந்தாலும் அடுத்த கட்டத்திற்கு நாம் நகர வேண்டும் என தெரிவித்தார். மேலும், சீன ஜனாதிபதி ஜின்பிங்கை சந்தித்த பிறகே கிம் இப்படி



மாறியுள்ளதாகக் கூறிய ட்ரம்ப், சீனா இந்த சிங்கப்பூர் சந்திப்பு நடக்கக்கூடாது என நினைத்து மடைமாற்றியிருக்கலாம் எனவும் ட்ரம்ப் குற்றம் சாட்டினார்.

அணு ஆயுதங்களை கைவிட்டால் வடகொரியாவை தொடர்ந்து கிம் ஆள ட்ரம்ப் ஒத்துழைப்பார் என அமெரிக்கா தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், அமெரிக்கா உள்நாட்டில் கிளர்ச்சியை ஏற்படுத்தி லிபியாவில் கடாபிக்கு நேர்ந்ததைப் போல தனக்கும் நேர்ந்து விடுமோ என நினைத்த கிம் அமெரிக்காவுடன் ஒத்துழைக்காமல் இருப்பதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (7)

## கர்நாடகாவில் தொடரும் சர்ச்சையால் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த உத்தரவு

### உச்சநீதிமன்றம் அதிரடி

(பெங்களூர்)

கர்நாடக சட்டமன்றத்தில் இரகசிய முறையில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்துமாறு உச்சநீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

கர்நாடக சட்டமன்றத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால், ஆட்சியமைப்பதில் சர்ச்சை ஏற்பட்டுள்ள நிலையிலேயே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இந்நிலையில், 104 இடங்களை கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக வந்த பாரதிய ஜனதா கட்சி தலைவர் எடியூரப்பாவை ஆட்சி அமைக்குமாறு ஆளுநர் அழைப்பு விடுத்துள்ளார்.

எடியூரப்பா பதவி ஏற்க எதிர்ப்புத் எதிர்த்து 117 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவைக் கொண்டிருக்கும் மதசார்பற்ற ஜனதாதளம் மற்றும் காங்கிரஸ் கட்சிகள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தன.

இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் காங்கிரஸ், ஜனதா தளம் கட்சிகளுக்கு பெரும்பான்மை உள்ள நிலையில் பாரதிய ஜனதாவை மட்டும் ஆட்சி அமைக்க அழைத்தது ஏன் என்று கேள்வி எழுப்பியதுடன், நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த உத்தரவிட்டுள்ளது. (7)

## தென்கொரியாவின் தகவலில் உண்மையில்லை - வடகொரியா மறுப்பு

(சியோல்)

தென்கொரியா தெரிவித்திருக்கும் தகவலில் உண்மையில்லை என வடகொரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரத்துச்செய்யப்பட்ட பேச்சுவார்த்தையினை திரும்பவும் நடத்துவதற்கு வடகொரிய ஜனாதிபதியுடன் தொலைபேசியில் பேசியதாகத் தென்கொரிய ஜனாதிபதி மாளிகையின் ஊடகப்பேச்சாளர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலையில் தெரிவித்திருந்த நிலையில் கிம் யாங் உன் மற்றும் மூன் ஜேன் இன் இடையில் எந்த விதமான தொலைபேசி உரையாடல்களும் நிகழவில்லை என வடகொரிய அதிகாரிகள் நேற்று தெரிவித்துள்ளனர்.

தென் -வடகொரியாக்களுக்கிடையில் பியங் யோங்கில் நேற்று பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெறவிருந்த நிலையில் ஒரு வாரத்திற்கு முன்பு ஆரம்பித்த தென்கொரிய அமெரிக்கக் கூட்டு இராணுவப் பயிற்சியில் பல தரப்பட்ட போர் விமானங்கள் யுத்த ஒத்திகை பார்க்கப்படுவதனை காரணம் காட்டி குறித்த பேச்சுவார்த்தை இரத்து செய்யப்பட்டதோடு கிம் யாங் உன் அமெரிக்க ஜனாதிபதியை சிங்கப்பூரில் சந்திப்பது குறித்து வடகொரியாவின் முதல் துணை வெளிவிகார அமைச்சர் Kim Kye Gwan சந்தேகம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# கிளர்ச்சிக்குழு வசம் இருந்த கடைசிப்பகுதியும் சிரிய அரசு படைகளால் மீட்கப்பட்டது



(டமாஸ்கஸ்)

சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் வசம் இருந்த கடைசிப் பகுதியும் அரசுப் படைகளின் கட்டுப்பாட்டுக்கு வந்ததை தொடர்ந்து அப்பகுதியில் இருந்த கிளர்ச்சியாளர்கள் வேகமாக வெளியேறி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

சிரியாவில் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக உள்நாட்டு கிளர்ச்சியாளர்கள் ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த போராட்டத்துக்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் மறைமுகமாக ஆதரவு தெரிவித்து வருகின்றன.

அதேவேளையில், அமெரிக்காவுடன் மோதல் போக்கை கடைப்பிடித்து வரும் ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் தலைமையிலான அரசையும் கிளர்ச்சியாளர்கள் மீதான அரசுப் படைகளின் தாக்குதலையும் ஆதரித்து வருகின்றன.

சிரியாவில் கடந்த ஏழு ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரினால் இதுவரை 1.2 கோடி மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி இருக்கிறார்கள். சுமார் 61 இலட்சம் மக்கள் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்துள்ளனர். 56 இலட்சம் பேர் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டனர்.

2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிரான போராட்டங்கள் தொடங்கியதில் இருந்து இதுவரை அங்கு 4 இலட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். அல்லது காணாமல் போயுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் மத்திய சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்த கடைசி பகுதிகளான ஹமா மற்றும் ஹோம்ஸை சுற்றியுள்ள ராஸ்டன், டல்பேசேஹ் மற்றும் ஹௌலா பகுதிகள் இன்று அரசுப்படைகளின் கட்டுப்பாட்டுக்கு வந்தது. அங்கு கிளர்ச்சியாளர்களால் மூடப்பட்டிருந்த அந்நாட்டின் முக்கிய தேசிய நெடுஞ்சாலையை அரசுப்படைகள் திறந்து வைத்துள்ளனர். இதன் காரணமாக அங்கு மீதம் இருந்த கிளர்ச்சியாளர்கள் அப்பகுதியை விட்டு வேகமாக வெளியேறி வருகின்றனர்.

ஏற்கனவே, சிரிய அரசுடன் கிளர்ச்சியாளர்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தியிருந்தனர்.

அதில், கிளர்ச்சியாளர்கள் வசம் இருந்த பகுதியை விட்டு கிளர்சியாளர்களின் குடும்பம் மற்றும் ஜனாதிபதி ஆசாத் ஆட்சியின் கீழ் இருக்க விரும்பாத பொதுமக்களும் என சுமார் 1,10,000 பேர் கிளர்ச்சியாளர்களுடன் வெளி



யேற முடிவு செய்யப்பட்டது. அதன்படி இந்த மாதம் தொடக்கம் முதல் 27 ஆயிரம் பேர் வெளியேறியுள்ளனர். அவர்கள் அனைவரும் நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள துருக்கி மற்றும் ஜோர்தான் எல்லையை நோக்கி நகர தொடங்கியுள்ளனர். கடந்த 2016ஆம் ஆண்டு கிளர்ச்சியாளர்கள் முற்று கையிட்டிருந்த பகுதிகளான கிழக்கு அல்லெப்போ பகுதியில் இருந்து 30 ஆயிரம் பேரும், கடந்த மாதம் கிழக்கு கவுட்டா பகுதியில் இருந்து 66 ஆயிரம் பேரும் ஏற்கனவே வெளியேறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

கிளர்ச்சியாளர்கள் வெளியேறி வருவதை அடுத்து அங்கு அமைதி திரும்பி வருகிறது. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை தாண்டி சட்டவிரோதமாக குடியேறுவோர் மனிதர்கள் இல்லை

## ட்ரம்ப் சர்ச்சை



(வோஷிங்டன்)

மெக்சிக்கோவிலிருந்து எல்லை தாண்டி சட்ட விரோதமாக அமெரிக்கா வருபவர்கள் மனிதர்கள் இல்லை விலங்குகள் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.

மெக்சிக்கோவிலிருந்து எல்லை தாண்டி அமெரிக்காவுக்குள் வருபவர்களை தடுக்க தடுப்புச்சுவர் கட்டும் பணி நடந்து வருகிறது.

தீவிர கண்காணிப்பையும் மீறி உள்ளே நுழைபவர்கள் உடனடியாக கைது செய்யப்படுகின்றனர். இதையும் தாண்டி பலர் அமெரிக்காவுக்குள் நுழைகின்றனர்.

இந்நிலையில், வெள்ளை மாளிகையில் நடந்த கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிக்கையில், சட்டவிரோதமாக மக்கள் நாட்டிற்கு வருவதை வர முயற்சிப்பதை நாம் வெகுவாக நிறுத்தி இருக்கிறோம்.

அப்படி வருபவர்களை நாட்டை விட்டு வெளியேற்றுகிறோம். இந்த மக்கள் எவ்வளவு மோசமானவர்கள் என்று நீங்கள் நம்பமாட்டீர்கள். இவர்கள் மக்கள் அல்ல, விலங்குகள் எனத்தெரிவித்தார். மேலும், பலவீனமான சட்டங்களின் காரணமாக அவர்கள் நாட்டிற்குள் விரைந்து வருகிறார்கள். நாம் பிடிக்கிறோம், விடுதலை செய்கிறோம், மீண்டும் பிடிக்கிறோம், மீண்டும் அவர்களை விடுதலை செய்கிறோம். இது பைத்தியக்காரத்தனம்.

முட்டாள்தனமான சட்டங்களால் நாட்டில் சட்டவிரோத புலம்பெயர்ந்தோரின் வருகை அதிகரிக்கிறது. அமெரிக்காவிற்கு சட்டபூர்வமாக மற்றும் தகுதி அடிப்படையில் மக்கள் வர வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

சில மாதங்களுக்கு முன்னர் ஆபிரிக்காவில் இருந்து குடியேறிவர்களை கெட்ட வார்த்தை பயன்படுத்தி அவர் பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. (7)

# பாகிஸ்தானில் துப்பாக்கிச் சமர் இராணுவ அதிகாரி உட்பட நால்வர் பலி



(குவெட்டா)

பாகிஸ்தானில் ஜெய்ஷ் இ ஜாங்வி பயங்கரவாத அமைப்பு தடை செய்யப்பட்டு உள்ளது. இந்த அமைப்பின் பலுசிஸ்தான் பிராந்திய தலைவர் சல்மான் பாதனி.

சல்மான் பாதனியும் அவரது கூட்டாளிகளும் பலுசிஸ்தான் மாகாணத்தின் தலைநகர் குவெட்டாவின் புறநகர்ப் பகுதியில் பதுங்கி இருப்பதாக இராணுவத்துக்கு உளவுத்தகவல்கள் கிடைத்தன.

அவற்றின் பேரில் இராணுவத்தினர் அங்கு விரைந்து சென்று சுற்றி வளைத்தனர். அப்போது இராணுவத்தினரை நோக்கி பயங்கரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர்.

இராணுவத்தினரும் தங்கள் துப்பாக்கியால் அவர்களுக்கு தக்க பதிலடி தந்தனர். இரு தரப்பினருக்கும் இடையே நீண்ட நேரம் துப்பாக்கிச்சண்டை நடந்தது. இதன் முடிவில் சல்மான் பாதனியும், அவரது கூட்டாளிகளும் தற்கொலைப்படை பயங்கரவாதிகளுமான 2 பேரும் கொல்லப்பட்டனர்.

மேலும் பாகிஸ்தான் இராணுவ உளவு அதிகாரி ஒருவரும் பலியானார்.

கொல்லப்பட்டு உள்ள சல்மான் பாதனி, ஹசாரா சமூகத்தை சேர்ந்த 100இற்கும் மேற்பட்டோரையும் பொலிஸாரையும் கொன்று குவித்த குற்றச்சாட்டுக்கு ஆளானவர் என இராணுவம் விடுத்து உள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த மாதத்தின் தொடக்கத்தில் தங்களுக்கு எதிராக நடத்தப்படுகிற கொலை வெறி தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவித்து, ஹசாரா சமூகத்தினர் குவெட்டாவில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியது நினைவு கூரத்தக்கது. (7)

# கிலுயுயே வெடித்து சிதறியது 37 வீடுகள் சேதம்



(நியூயோர்க்)

ஹவாய் தீவுகளின் ஹோனோலு பகுதியில் உள்ள கிலுயுயே எரிமலை வெடித்து சிதறியதில் 37 வீடுகள் வரையில் சேதமடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹவாய் தீவுகளின் ஹோனோலுலு பகுதியில் உள்ள கிலுயுயே எரிமலையில் நேற்று முன்தினம் வெடிப்பு ஏற்பட்டது.

இதன்காரணமாக நெருப்புடன் கூடிய புகை வெளியேறுகிறது. சுமார் 6 மைல் உயரத்திற்கு புகை பரவியுள்ளது. மேலும் பல மீற்றர் தூரத்திற்கு எரிமலை குழம்பு பரவியுள்ளது.

இந்த எரிமலை வெடிப்பினால் அப்பகுதியில் உள்ள 37 வீடுகள் சேதமடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

மேலும் எரிமலை குழம்புகள் அப்பகுதி முழுவதும் ஆக்கிரமித்த வண்ணம் உள்ளதால் அப்பகுதியில் வசிக்கும் 2000 இற்கும் மேற்பட்ட மக்களை பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறு அரசு அறிவுறுத்தியுள்ளது. மேலும் சுற்றுலாப் பயணிகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆம் திகதியும் இந்த எரிமலை வெடித்து சிதறியது என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# மீண்டும் பரவும் எபோலா 23 பேர் உயிரிழப்பு



(கின்சாசா)

விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு பரவக் கூடிய எபோலா வைரஸ் நோய், உயிராபத்தை ஏற்படுத்தக் கூடியதாகும்.

எபோலா வைரஸ் நோய் முதலில் 2013ஆம் ஆண்டு, ஆபிரிக்க நாடுகளில் பரவியது. 2016ஆம் ஆண்டு வரை இந்த வைரஸ் நோய்க்கு 11 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகினர்.

எபோலா வைரஸ் நோய் தாக்கியவர்களுக்கு சிகிச்சை அளித்த தாதியர்களும் பாதிப்புக்கு ஆளாகினர்.

இப்போது மறுபடியும், காங்கோ நாட்டில் இந்த வைரஸ்நோய்பரவத்தொடங்கி உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அங்கு மபண்டாகா நகரில் இந்த நோய் பரவி வருகிறது. கடந்த சில தினங்களில் இந்த வைரஸ் நோய் தாக்கி 23 பேர் பரிதாபமாக பலியாகினர்.

இந்த வைரஸ் நோய் பரவி வருவதை காங்கோ நாட்டின் சுகாதார அமைச்சர் ஒலி இலுங்கா கலிங்கா உறுதி செய்தார்.

தற்போது 52 பேரை இந்த நோய் தாக்கி உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதற்கிடையே அந்த நாட்டுக்கு 4 ஆயிரம் பேருக்கு செலுத்தத்தகுந்த எபோலா வைரஸ் தடுப்பு மருந்தை உலக சுகாதார நிறுவனம் சோதனை ரீதியில் அனுப்பி வைத்து உள்ளது. (7)

# பா.ஜனதாவிற்கு எதிராக அனைத்து கட்சிகளும் ஒன்றிணையவேண்டும்

## மதசார்பற்ற ஜனதா தள கட்சித்தலைவர் அழைப்பு

(பெங்களூர்)

மேற்கு வங்காள முதல்வர், ஆந்திர முதல்வர், தெலுங்கானா முதல்வர், பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் ஆகியோர் பா.ஜனதாவுக்கு எதிராக இணைய வேண்டும் என்று மதசார்பற்ற ஜனதா தளம் கட்சித் தலைவர் குமாரசாமி தெரிவித்தார்.

மதசார்பற்ற ஜனதா தளம் கட்சித் தலைவர் குமாரசாமி பெங்களூரில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது.

எடியூரப்பாவை முதலமைச்சராக பதவி ஏற்க ஆளுநர் வஜுபாய் வாலா அழைப்பு விடுத்தது அரசியலமைப்பு சட்டத்துக்கு விரோதமானது. கர்நாடக விவகாரத்தில் மத்திய அரசு தவறாக நடந்து கொள்கிறது. நாட்டில் ஜனநாயகத்தை அழிப்பதற்கு மத்திய அரசு விரும்புகிறது.

ஆளுநரை சந்தித்து எங்கள் கூட்டணிக்கு பெரும்பான்மை எம்.எல்.ஏக்கள் ஆதரவு இருப்பது தொடர்பான பட்டியலை அளித்தேன். ஆனால் எங்களை ஆட்சியமைக்க அவர் அழைப்பு விடுக்கவில்லை. ஆனால் பெரும்பான்மை எம்.எல்.ஏ.க்கள் பலம் இல்லாதோருக்கு ஆட்சி அமைக்க அவர் வாய்ப்பு அளித்துள்ளார்.

மேலும் பெரும்பான்மையை நிருபிக்க 15 நாட்கள் அவகாசமும் அளித்துள்ளார். நம் நாட்டில் இதுபோல நடந்திருப்பது இதுதான் முதல்முறை.

ஆளுநர் 15 நாட்கள் அவகாசம் கொடுத்தது வியாபாரம் பேசுவதற்கு வழிவகுக்கும் அமுலாக்கத்துறை போன்ற விசாரணை அமைப்புகளை மத்திய அரசு தவறாக பயன்படுத்துகிறது.

எம்.எல்.ஏ.க்களை மிரட்டுவதற்கும் நிர்ப்பந்தம் அளிப்பதற்கும் தான் விசாரணை அமைப்புகளை மத்திய அரசு பயன்படுத்துகிறது.

காங்கிரஸ் எம்.எல்.ஏ. அனந்த்சிங்குக்கு எதிராக வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளது. இதனால் அமுலாக்கத்துறையை கொண்டு அவரை மிரட்டுகிறது. அனந்த் சிங்குடன் நான் பேசவில்லை. காங்கிரஸ் கட்சியை சேர்ந்த எம்.எல்.ஏ. ஒருவர் தான் இதை என்னிடம் தெரிவித்தார்.

எங்கள் கட்சியை சேர்ந்த எம்.எல்.ஏ.க்களையும் அமுலாக்கத்துறை போன்ற விசாரணை அமைப்புகள் மூலம் மத்திய அரசு மிரட்டுகிறது. பா.ஜனதா [illegible] கட்சிகள் இந்த விவகாரத்தில் கரம் கோர்க்க வேண்டும். இதற்கான முயற்சியை எனது தந்தை தேவகவுடா முன்னெடுக்க வேண்டும். மாநில கட்சிகளின் தலைவர்கள், மாநில முதல்வர்களை அவர் ஒருங்கிணைக்க வேண்டும்.

மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி, ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு, தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர ராவ், பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் மாயாவதி, பிஜு ஜனதா தளம் தலைவர் நவீன் பட் நாயக் ஆகியோர் பா.ஜனதாவுக்கு எதிராக இணைய வேண்டும்.

தேசத்தின் பாதுகாப்பை அவர்கள் பாதுகாக்க வேண்டும். தங்களுக்கு இடையேயான வேறுபாடுகளை மறக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார். (7)

# கரைக்குத் திரும்பியது சீனாவின் போர் விமானம்



(பீஜிங்)

சீனாவில் முதன்முதலாக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட போர் விமானம் கடற்சோதனைகளை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு நேற்று வெள்ளிக்கிழமை கரைக்குத் திரும்பியுள்ளது.

குறித்த விமானம் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் திகதி சீனாவில் ஆரம்பிக்கப்பட்ட Dalian Shipbuilding Industry நிறுவனம் இந்த விமானத்தினை வடிவமைத்துள்ளது.

2012 இல் ரஷ்யாவினால் உருவாக்கப்பட்ட ஒரு போர்விமானத்திற்கு பொருத்துதல் வேலைகள் (Liaoning) பார்த்து சீன மக்கள் விடுதலைப்படை உரிமையாக்கியது. அந்தவகையில் இந்த விமானம் இரண்டாவது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் உள் நாட்டிலேயே உருவாக்கப்பட்டு பொருத்துதல் வேலைகளும் நடந்து பயன்படுத்தத் தயாரான முதலாவது சீனாவின் விமானம் இதுவாகும். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தை மறந்து விட்டனர்

## கோத்தா வேதனை

(கொழும்பு)

30 வருட யுத்தத்தை முற்றாக ஒழித்த இராணுவத்தினரின் அர்ப்பணிப்பை பலரும் மறந்து போயுள்ளதாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

"உலக நாடுகள் எவையுமே முற்றாக யுத்தத்தை ஒழிக்காத போது தனிப்பட்ட நலன்களை மாத்திரம் கருத்திற்கொள்ளாமல் மக்களுக்கு முற்றாக யுத்தத்தை ஒழித்த இராணுவம் இலங்கையில் மாத்திரமே உள்ளது.


மக்களின் பாதுகாப்பு மற்றும் இருப்பை கருத்திற் கொண்டே இராணுவம் இந்த செயற்பாடுகளை முன்னெடுத்தது. இதனை பலரும் மறந்து போயுள்ளனர். இந்த நாட்டின் அப்பாவி மக்கள் பலரை பயங்கரவாதிகள் கொன்று குவித்தனர்.

அத்துடன் எல்லை கிராமங்களிலிருந்த மக்களின் உயிர் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்ட முப்படையின் செயற்பாடுகள் மறக்க முடியாதவை. மேலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இராணுவ வீரர்களுக்கு தாம் பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலத்தில் ஏற்படுத்திக்கொடுத்த நலத் திட்டங்களும் அவர்களை சென்றடைவதில்லை" என தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையில் இப்படியும் நடக்கிறது

(கொழும்பு)

இலங்கையில் மயில் குஞ்சுகள் இரண்டினை கோழி ஒன்று பாதுகாக்கும் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.



தம்பதெனிய, சாலியாய ஸ்ரீவர்தனாராம விகாரையில் வாழும் கோழி ஒன்று தனது இனத்திற்கு சொந்தமில்லாத மயில் குஞ்சுகளை பாதுகாத்து வருகிறது.

இந்த கோழி, மயில் குஞ்சுகளை மிகவும் பாதுகாப்பாக வளர்த்து வருவதாக அந்த பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மயில் குஞ்சுகளுக்காக கோழி உணவு தேடி வழங்கி வருகிறது. (இ-7)

# ராஜிதவின் கருத்து மிகவும் பாரதூரமான கருத்தாகும்

## ஓமல்பே தேரர் எதிர்ப்பு

(கொழும்பு)

சுகாதார அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான டாக்டர் ராஜித சேனாரட்னவின் கருத்து மிகவும் பாரதூரமானது என தென்னிலங்கையின் பிரதான சங்க நாயக்கரான கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி வீரர்கள் தினத்தை கொண்டாடுவது போன்று புலிகளும் தங்களது நினைவஞ்சலி நிகழ்வுகளை நடத்த முடியும் என அமைச்சரவை பேச்சாளர் ராஜித வெளியிட்ட கருத்து குறித்து சிங்கள ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக நினைவேந்தல் நடவடிக்கை சரியானது என ராஜித சேனாரட்ன வெளியிட்ட கருத்து அரசாங்கத்தின் நிலைப்பாடா? என்பதனை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்.

அமைச்சரின் இந்தக் கருத்து குறித்து ஜனாதிபதியும் பிரதமரும் தங்களது நிலைப்பாடுகளை நாட்டு மக்களிடம் முன்வைக்க வேண்டும் எனவும் ஓமல்பே தெரிவித்தார். (இ-7)

# நாமலுக்கு எதிரான தடை நீக்கம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.



கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் றக்பி விளையாட்டின் முன்னேற்றத்திற்காக கிரிஸ் என்ற இந்திய நிறுவனம் வழங்கிய 70 மில்லியன் ரூபாய் பணத்தை தவறாக பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிரான விசாரணைகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளதாக பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகள் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் கூறியுள்ளனர்.

இந்த வழக்கு கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜெயரத்ன முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது வாதங்களை முன்வைத்த நிதி மோசடி விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் விசாரணை தொடர்பான அனைத்து அறிக்கைகளையும் சட்டமா அதிபருக்கு அனுப்பியுள்ளதாக கூறியுள்ளனர்.

சட்ட மா அதிபரின் ஆலோசனை இன்னும் கிடைக்கவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்வைக்கப்பட்ட வாதங்களை ஆராய்ந்த நீதவான், வழக்கு விசாரணைகளை ஜுலை 13 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். அத்துடன் இந்த வழக்கு சம்பந்தமாக துரிதமாக சட்ட ஆலோசனைகளை வழங்குமாறும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

நாமல் ராஜபக்ஷவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணியின் கோரிக்கைக்கு அமைய நாமலுக்கு நேற்று முதல் ஜுலை 13 ஆம் திகதி வரை வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டிருந்த தடையையும் நீக்கி, நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# அரசாங்கத்திலிருந்து விலகும் நாளை தீர்மானிக்குமாறு ஜனாதிபதி கூறினார்



## தயாசிறி ஜெயசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து விலகுவதற்கான நாளொன்றைக் குறித்துக் கொள்ளுமாறு, தேசிய அரசாங்கத்தில் நிலைத்திருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 23 பேருக்கும் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்தியதாக தயாசிறி ஜெயசேகர எம்.பி தெரிவித்தார்.

புதிய கட்சி மறுசீரமைப் பின்கீழ் எதிர்வரும் ஜுன் 3ஆம் திகதியன்று, புதிய நிர்வாகச் சபையொன்று நியமிக்கப்பட உள்ளதாகவும், தயாசிறி தெரிவித்தார்.

கொழும்பு சுதந்திர ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம் பெறும். கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் உற்சவம் நடைபெற்றது. இதற்கமைய வேட்டைத் திருவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கும் சப்பறத் திருவிழா மறுநாள் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கும் தேர்த்திருவிழா 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கும் பூங்காவனம் 30 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கும் வைரவர் பொங்கல் 31 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கும் இடம் பெறவுள்ளன. (இ

## விசேட சொற்பொழிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு சந்திரபுரம் திருவருள் மிகு ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு விசேட சொற்பொழிவு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என சமயஜோதி க.நிஜலிங்கம் அறிவித்துள்ளார். நாளை 20.05.2018 இலிருந்து 29.05.2018 வரை மாலை 6.30 மணிக்கு சொற்பொழிவு இடம்பெறும். சைவப்புலவர்கள் பொன்.சந்திரவேல், ச.முகுந்தன், கந்தசத்தியதாசன், ஏ.அனுசாந்தன், கா.கமலநாதன், செ.த.குமரன், இளம் சைவப்புலவர்கள், ச.நவநீதன், க.கைலநாதன், சைவசான்மயர் க.ஈஸ்வரன் ஆகியோர் சொற்பொழிவாற்றவுள்ளனர். (இ-7)

## காத்தான்குடியில் மர ஆலையில் தீ



(காத்தான்குடி)

காத்தான்குடி பிரதேசத்திலுள்ள மர விற்பனை நிலையமொன்றில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. நேற்று அதிகாலை 3.20 மணியளவில் ஏற்பட்ட இந்த தீயினை பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

குறித்த தீயினால் எந்தவித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை எனவும் தீ விபத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## பெண் அதிபர் உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பில் பிரபல்யமான பாடசாலைக்கு முதலாம் தரத்துக்கு இவ்வருடம் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைபாடுகள் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்தப் பாடசாலையின் அதிபர் உள்ளிட்ட நேர்முகம் கண்ட குழுவைச் சேர்ந்த ஐவர் மற்றும் கல்விசாரா ஊழியர் உள்ளிட்டோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது. (இ-7)

## கோப் குழுவின் தலைவராக மீண்டும் சுனில் ஹந்துன்நெத்தி

(கொழும்பு)



பொது நிறுவனங்கள் பற்றிய பாராளுமன்ற தெரிவுக்குழுவின் (கோப் குழுவின்) தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தியை மீண்டும் நியமிக்க கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர். சபாநாயகர் கருஜெய சூரிய தலைமையில், நேற்று முன்தினம் கட்சித் தலைவர்கள் ஒன்றுகூடிய போதே, இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிலே நீர் எதற்கு?
காலமெல்லாம் அழுவதற்கு.
நெஞ்சிலே நினைவெதற்கு?
வஞ்சகரை மறப்பதற்கு ~ கவியரசு கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஒற்றுமைதான் தமிழரின் பலம் முள்ளிவாய்க்கால் உணர்த்துவது அதையே

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உணர்வு பூர்வமாக நடந்தேறியது.

உறவுகளை இழந்த உறவுகள் கதறி அழுது கண்ணீர் விட்ட அந்தச் சோகம் மீள முடியாத துயரமாயிற்று.

என்ன செய்வது! தமிழன் என்பதால் இப்படியொரு பரிதவிப்பு என்ற நினைப்போடு கண்களைத் துடைத்துக் கொள்வதைத் தவிர வேறு என்னதான் செய்ய முடியும்.

தாளாத துன்பத்தோடு நாம் வாழ்கின்றோம். எங்கள் சந்ததியாவது நிம்மதியாக வாழும் உத்தரவாதமும் உறுதிப்பாடும் உண்டென்றாலாவது மனம் ஆறலாம்.

ஆனால் அதுவும் இல்லை எனும்போது எங்கள் இனத்தின் எதிர்காலம் எப்படியாகும் என்ற ஏக்கம் எழவே செய்கிறது.

எங்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பை; எங்கள் இனத்தை அழிக்க நடந்த போரை; அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றொழித்த போர்க்குற்றத்தை முதன்மைப்படுத்தி எம் இனத்துக்கான உரிமையை வென்றெடுக்க எங்கள் அரசியல் தலைமை கங்கணம் கட்டி நின்றிருக்க வேண்டும்.

ஆனால் எங்கள் சாபமோ என்னவோ எங்களுக்கு எதிரானவர்களிடம், எங்கள் இனம் பற்றிய எந்தச் சிந்தனையும் இல்லாதவர்களிடம், அரசுடன் சேர்ந்து போவதுதான் ஒரே வழி என்று நினைக்கக் கூடியவர்களிடம் எங்கள் அரசியல் தலைமை போய்ச் சேர்ந்தது.

இதன் விளைவாக எங்கள் இழப்பு அர்த்தமற்றதாகிக் கொண்டிருக்கின்றது.

போர்க்குற்ற விசாரணை என்ற குரலை ஓங்கி ஒலிக்கச் செய்ய வேண்டிய நாங்களே அரசுக்கு அவகாசம் கொடுங்கள் என்று கூறுமளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

ஆம், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்குக் கால அவகாசம் கொடுங்கள் என்று கூறியவர்கள்;

அவ்வாறு கால அவகாசம் கொடுத்தால், என்ன நடக்கும் என்பதை அறவே உணராதவர்கள் யார் என்றால் அது எங்கள் அரசியல் தலைமை எனும்போது தமிழனின் அரசியல் சாணக்கியம் எப்படியாக உள்ளது என்பதை சர்வதேச அரசியல் விற்பன்னர்கள் மிகச் சுலபமாக எங்கள் பற்றிய கணிப்பை செய்திருப்பர்.

எது எவ்வாறாயினும் எம் இனத்துக்கு எதிரானவர்களை கைவிட்டு தமிழர்கள் ஒற்றுமையாக உரிமைக்குரல் கொடுத்தால்,

எங்கள் பக்கம் சர்வதேசம் திரும்பும் என்பதே உண்மை.

இதை உணர்த்துவதாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அமைந்துள்ளது.

# தோழியின் எரிகாயங்களுக்கு வழங்கப்பட்ட சாராயத்தில் சிறிதளவை பெண் பருகிவிட்டார்

## போதையில் வாகனம் செலுத்திய இளம்பெண்ணுக்காக ஆஜரான சட்டத்தரணி மன்றில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் வாகனம் செலுத்திய இளம் பெண் தன்து குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 7 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டதுடன் அவரது சாரதி அனுமதிப்பத்திரத்தை ஒரு வருடத்துக்கு இடைநிறுத்துமாறு யாழ் நீதவான் நீதிமன்று கட்டளையிட்டுள்ளது.

கட்டப்பிராய் சந்திக்கு அருகில் கடந்த 15ஆம் திகதி பிளசர் ரக மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் பெண்கள் இருவர் கட்டைப்பிராய் சந்திக்கு அருகில் விபத்துக்கு உள்ளாகினர்.

விபத்துக்கு உள்ளானவர்கள் மது போதையில் இருந்தமை பொதுமக்களால் அவதானிக்கப்பட்டு பொலிஸார் மூலம் அவ்விடத்தில் இருந்து மீட்கப்பட்டனர்.

இந்த நிலையில் மது போதையில் வாகனத்தைச் செலுத்திய குற்றச்சாட்டில் குறித்த பெண் ஒருவர் மீது யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

அப்போது குற்றஞ்சாட்டப்பட்ட பெண் மன்றில் முன்னிலையாகாததால் அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் மூத்த சட்டத்தரணி ஊடாக அந்தப் பெண் நேற்று யாழ்.நீதிவான் நீதிமன்றில் சரணடைந்து குற்றத்தை ஏற்றுக் கொண்டார்.

அதாவது "தோழி எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார். அவர் உடலில் ஏற்பட்ட எரிகாயங்களால் வேதனைப்படுகிறார். அவருக்கு சாராயம் வழங்கப்பட்டது.

அதில் சிறிதளவை இந்தப் பெண்ணும் பருகி விட்டார் என்று மூத்த சட்டத்தரணி மன்றில் சமர்ப்பணம் செய்தார். அவருடன் எரிகாயங்களுக்குள்ளானவர் எனத் தெரிவிக்கப்பட்ட பெணணும் மன்றில் இருந்தார். அவரைக் காண்பித்தே மூத்த சட்டத்தரணி மன்றில் மேற்கண்டவாறு சமர்ப்பணம் செய்தார்.

குறித்த பெண்ணிடம் எத்தனை வயது? என்ன தொழில் செய்கிறீர்கள் என மன்றினால் கேட்கப்பட்டது. அப்போது தனக்கு 21 வயது எனவும் இசைக் குழுக்களில் பாட்டுப் பாடுவதாகவும் தெரிவித்தார்.

குற்றப்பத்திரத்தை ஆராய்ந்த மேலதிக நீதவான் காயத்திரி சைலவன், 7 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் செலுத்த உத்தரவிட்டார். அத்துடன் சாரதி அனுமதிப் பத்திரத்தை ஒரு வருடங்களுக்கு இடைநிறுத்துமாறும் கட்டளையிட்டார். (ம-9)

# வடக்கு பாடசாலைகளில் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்த மாகாண கொடிகள்

(யாழ்ப்பாணம்)

முளளிவாய்க்கால்நினைவு தினமான நேற்றைய தினம் வடக்கு மாகாண பாடசாலைகளின் கொடிகள் மற்றும் பாடசாலைகளில் ஏற்றப்பட்டிருந்த மாகாண கொடிகள் ஆகியன அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டிருந்தன.

முள்ளிவாய்க்கால் நினைவு தினமான நேற்றைய தினம் வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலை கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்கவிடுமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவித்திருந்தது.

இதற்கமைய வடக்கின் அனைத்து பாடசாலைகளுமகொடிகளை அரைக கம்பத்தில் பறக்கவிட்டன.

இது தவிர சில பாடசாலைகளில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டிருந்தன.

முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற நினைவு நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்கள் கடமையில் அமர்த்தப்பட்டு முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தியிருந்தனர்.

இதேபோன்று தேசிய பாடசாலைகளிலும் இந்த நினைவு நிகழ்வுகள் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும்தாழ் அழுத்த மின் விநியோக மார்ககங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை யாழ். பிரதேசத்தில புனித நகர், மாதனை, கற்கோவளம், வெளிச்சவீடு, தும்பளை, வறாத்துப்பளை, திகிரி, கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, கெருடாவில், பொக்கணை, தொண்டைமானாறு, அக்கரை, மயிலியதனை, ஊறிக்காடு, குருநகர், பழைய பூங்கா வீதியின் ஒரு பகுதி, பாசையூர், கொய்யாத் தோட்டம், கொழும்புத்துறை வீதி, புங்கங்குளம் வீதி, சுவாமியார் வீதி, வலன்புரம், துண்டி, நெடுங்குளம், மணியந்தோட்டம், உதயபுரம், குருநகர் ஐஸ் தொழிற்சாலை, Cey-Nor பவுண்டேஷன் லிமிட்டட், மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், NEFAD பவுண்டேஷன் லிமிட்டட், குருநகர் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம், Infentas Ice Solutions (Pvt) Ltd மணியந்தோட்டம், சில்லாலை, சாந்தை, மாதகல், இளவாலை, அளவெட்டி ஒரு பகுதி, தொட்டிலடி, சங்கானை, சுழிபுரம் முழுவதும், பண்டத்தரிப்பு, பிரான்பற்று, சேந்தான்குளம், ஜம்பு கோளப்பட்டினம், காட்டுப்புலம், குசுமாந்துறை ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில பெரிய பரந்தன், நல்லூர், பூநகரி, 4 ஆம் கட்டை, 66வது படைப்பிரிவு பூநகரி, பிரதேச செயலகம் பூநகரி, 5V படைப்பிரிவு பூநகரி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தாண்டிக்குளத்திலிருந்து கீரி சுட்டான் வரை, இரணை இலுப்பங்குளம், சின்ன வலயன்கட்டு, நொதேர்ண் பாம், புதுக்குளம், நீர்ப்பாசனத் திணைக்களம், வரன் அரிசி ஆலை, மறக்கறம்பளை பயிற்சி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### இயற்கை அன்னையின் மகத்துவம் என்ன?

பண்டைக்காலம் முதலே மனிதன் இயற்கையை நேசித்து வணங்கி வந்துள்ளான். இயற்கை உலக அன்னையாகும். அதை வணங்குவது நமது தர்மமாகும். அந்தத் தர்மத்தை நாம் தவறாது கடைப்பிடிப்பதால் இயற்கை அன்னையும் தனது வாரிசுகளை கருணையுள்ளத்துடன் பாதுகாக்கிறாள். அவள் சினங்கொண்டால் இயற்கைச் சீற்றம் கொண்டு அதன் குணத்தை வெளிப்படுத்தும். இயற்கை அன்னை கோபம் கொள்கிறாள் என்று தெரிந்தால் மக்கள் ஒன்றாகச் சேர்ந்து அவளைச் சந்தோசப்படுத்துகிறார்கள். அவர்கள் இயற்கைக்கு மாறாக எதுவும் செய்திருக்கவில்லை. இயற்கையின் சக்தியை அவாகள் உணர்ந்திருந்தார்கள். இன்று நாம் செய்வது போல் இயற்கையை அவர்கள் இம்சிக்கவில்லை. எனவே இயற்கை பிரபஞ்சத்திற்கு அனுகூலமாக இருந்தது. *(தொடரும்)*

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- ❖ ஒருவனுக்கு தன்னம்பிக்கையே அடிப்படை. அதில் இல்லாதவன் தெய்வ பக்தி இல்லாத நாத்திகனைப் போன்றவன்.
- ❖ விடாமுயற்சிமட்டும்நம்மிடம் இருந்துவிட்டால்நம்மால்சாதிக்க முடியாத செயல் என்று எதுவுமே இல்லை.
- ❖ என்னால் முடியாது என்று ஒருபோதும் சொல்வது கூடாது. எல்லாவற்றையும் சாதிக்கக்கூடிய வல்லமை நம்மிடம் இருக்கிறது.
- ❖ சுயநலம் என்பது சிறிதும் மனதில் இருப்பது கூடாது. அதை தூர எறிந்துவிட்டு ஆக்கப் பூர்வமான பணிகளில் ஈடுபடுங்கள்.
- ❖ நீங்கள் சிங்கம் போன்றவர்கள். செம்மறி ஆடுகள் என்ற மயக்கத்தை உதறித் தள்ளிவிட்டு உற்சாகத்துடன் செயலாற்றுங்கள்.
- ❖ தன்னைத்தானே தாங்குபவனாக, சொந்தக்காலில் தலைநிமிர்ந்து நிற்கும் பலமுள்ளவனாக செய்ய வல்ல கல்வித்திட்டம் நமக்குத் தேவை.
- ❖ உயர்ந்த லட்சியங்களை மனதில் உருவாக்குங்கள். எப்போதும் அதை அடைவதற்கான சிந்தனையில் ஈடுபடுங்கள்.
- ❖ [illegible] செயற்படுத்தும் துணிவையும், மனவலிமையையும் தியானத்தின் மூலம் நம்மால் பெறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியிலிருந்து வேதனைப்பட்டார்; பொல்லார்ட் குறித்து ரோகித் உருக்கம்



மும்பை அணியின் அதிரடி ஆட்டக்காரரான பொல்லார்டை விளையாடும் பதினொரு பேருக்கான அணியில் சேர்க்காததால், அவர் வருத்தப்பட்டதாக அந்த அணியின் தலைவர் ரோகித்சர்மா கூறியுள்ளார்.

ஐ.பி.எல். தொடரின் பஞ்சாப்-மும்பை அணிகள் மோதின. பரபரப்பான இப்போட்டியில் மும்பை அணி கடைசிக் கட்டத்தில் 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மும்பை அணி 13 போட்டிகளில் 6 வெற்றி 7 தோல்வி என 12 புள்ளிகளுடன் நான்காவது இடத்தைப் பிடித்து பிளே ஓவ் சுற்றுக்கான வாய்ப்பை தக்க வைத்துக் கொண்டது.

இந்நிலையில் இப்போட்டியின் வெற்றிக்கு பின் பேசிய ரோகித், இந்தப் போட்டியில் வெற்றி பெற்றது மகிழ்ச்சியளிக்கிறது.

இது மிகவும் முக்கியமான போட்டி என்பதால், என்ன எல்லாம் எதிர்பார்த்தோமோ அதை எல்லாம் எங்கள் வீரர்கள் செய்து முடித்தார்கள்.

இந்த மைதானம் துடுப்பாட்டத்திற்கு சாதகமான மைதானம் என்பதால், அதிக ஓட்டங்கள் எடுக்க முடியும். இருப்பினும் மிடில் ஆர்டரில் நாங்கள் தடுமாறிவிட்டோம்.

பொல்லார்ட் எப்போதும் எங்கள் அணிக்கு மெட்ச் வின்னராக இருந்துகொண்டிருக்கிறார். கடந்த சில போட்டிகளில் அவரை விட்டுவிட்டு விளையாடினோம்.

அது எப்போதும் கடினமான முடிவுதான். விளையாடும் பதினொரு பேருக்கான அவர் சேர்க்கப்படாததற்கு வருத்தப்பட்டார்.

டுமினி கடைசிக்கட்ட ஓவர்களில் வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளாததால் பொல்லார்டுக்கு இன்னொரு வாய்ப்புக் கொடுக்க நினைத்தோம். அவர் அழுத்தமான சூழ்நிலைகளில் எப்போதும் நன்றாக ஆடக்கூடியவர். அதை அவர் சரியாகவே செய்தார் என்றும் கூறியுள்ளார். (க)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது
076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# சம்பியன் அணி போன்றே விளையாடுகிறோம் சென்னை சுப்பர் கிங்சை புகழ்ந்த ரெய்னா



இரண்டு ஆண்டுகள் தடைக்குப் பின் களம் இறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் சம்பியன் அணி போன்று விளையாடுவதாக ரெய்னா தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல்-லில் இரண்டு ஆண்டுகள் தடைக்குப் பிறகு களம் இறங்கிய சென்னை அணி சிறப்பாக விளையாடி வருகிறது. இதுவரை நடைபெற்ற அனைத்துத் தொடரிலும் Play Off சுற்றுக்கு முன்னேறி சாதனை படைத்துள்ளது. மேலும், சென்னை அணி இரண்டு முறை ஐ.பி.எல். சம்பியன் பட்டத்தையும் இரண்டு முறை சம்பியன்ஸ் லீக் பட்டத்தையும் வென்றுள்ளது.

இந்நிலையில், சென்னை அணியில் விளையாடி வரும் சுரேஷ் ரெய்னா சென்னை சுப்பர் கிங்ஸ் சம்பியன் அணி போன்று விளையாடுவதாக புகழ்ந்துள்ளார். இது குறித்து சுரேஷ் ரெய்னா தெரிவிக்கையில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது.

சில வீரர்கள் தங்களது இடத்தை கெட்டியாக பிடித்துக் கொண்டு, அணியின் வெற்றிக்கான பொறுப்பை கையில் எடுத்துள்ளனர்.

இப்படி இருக்கும்போது, நாங்கள் ஒவ்வொரு போட்டியிலும் சம்பியன் அணி போன்று தான் விளையாடுகிறோம் நாங்கள் எங்களுடைய போட்டிகளை பயமின்றி விளையாடுகிறோம் என மேலும் தெரிவித்துள்ளார். (க)

# ஸ்பைடர்மானை நேரில் பார்த்தேன் - ஹோலி



11 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நடந்த 'லீக்' ஆட்டத்தில் ஐதராபாத்தை வீழ்த்தி பெங்களூர் 6 ஆவது பெற்றி பெற்றது.

ஐதராபாத் அணி தொடக்க வீரர் அலெக்ஸ் ஹால்ஸ் அடித்த பந்தை எல்லை கோர்ட்டில் நின்ற டிவில்லியர்ஸ் பாய்ந்து ஒரு கையில் கட்ச் பிடித்து பிரமிக்க வைத்தார்.

வெற்றி குறித்து பெங்களூர் தலைவர் விராட் ஹோலி கூறுகையில்,

எல்லை கோட்டில் டிவில்லியர்ஸ் பாய்ந்து கட்ச் பிடித்தது 'ஸ்பைடர்மான்' போல் இருந்தது. இதை நீங்கள் சாதாரண மனிதனாக இருந்தால் செய்ய முடியாது. அவரது பீல்டிங் நம்ப முடியாத வகையில் இருந்தது.

அவரது ஷொட்டுகள் இன்னமும் எனது பிரமிப்பில் இருந்து செல்லவில்லை. இந்த வெற்றி உத்வேகத்தை கடைசி போட்டியில் கொண்டு செல்வோம். (க)

# பூப்பந்தாட்டத் தொடர் இன்று

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 99 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு நடத்தப்படும் அரச உத்தியோகத்தர்களுக்கு இடையிலான பூப்பந்தாட்டத் தொடர் இன்று காலை 9 மணிக்கு நிலைய உள்ளக அரங்கில் இடம்பெறும். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இதுபோன்று முன்பே பார்த்து விட்டேன் வெற்றி குறித்து ஹோலி பெருமிதம்

இது போன்ற பரபரப்பான போட்டிகளை முன்பே நிறைய முறை பார்த்து விட்டேன் என பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணித் தலைவர் விராட் ஹோலி கூறியுள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் - ஹைதராபாத் அணிகள் மோதிய பரபரப்பான ஆட்டத்தில் பெங்களூர் அணி 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றியை பெற்றது.

இதன் மூலம் பிளே ஓவ் சுற்றுக்கான வாய்ப்பையும் பெங்களூர் அணி தக்கவைத்துக் கொண்டுள்ளது.

வெற்றிக்குப் பின்னர் பேசிய அணித்தலைவர் ஹோலி, இது போன்ற போட்டிகளை முன்பே நிறைய முறை பார்த்து விட்டேன். கடைசி கட்டத்தில் பதட்டம் அடையாமல் இருக்க வேண்டும் என்று மட்டும் நினைத்திருந்தேன்.



சிறப்பாக பந்துவீசிய பந்துவீச்சாளர்களுக்கு வாழ்த்துக்கள், அடுத்து ராஜஸ்தான் உடன் விளையாடும் போட்டியில் இதே நம்பிக்கையுடன் செல்வோம்.

இது தான் பெங்களூருவில் இந்தாண்டு நாங்கள் விளையாடும் கடைசிப் போட்டி. ஆதரவளித்த இரசிகர்களுக்கு நன்றி என கூறியுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இனப்படுகொலைக்கு...

விக்னேஸ்வரன் முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றத்தில் அறைகூவல் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

எம்மால் நடத்தப்படும் நான்காவது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இது.

பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு எந்த விதமான நீதியையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலையிலும்,தொடர்ந்து நீதிக்காகவும், தமது அடிப்படை உரிமைகளுக்காகவும், பாதுகாப்புக்காகவும் வீதிகளில் நின்று எமது மக்கள் போராடிவருகின்ற நிலையிலும். பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினரின் நில ஆக்கிரமிப்பின் கீழ் வடக்கு கிழக்கில் பௌதத மயமாக்கல் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் இன்று நாம் 9ஆவது ஆண்டு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நாளை கனத்த இதயங்களுடன் நினைவு கூருகின்றோம்.

மனித நாகரிக வளர்ச்சியின் உச்சத்தில் உலகம் இருக்கும் இன்றைய 21-ம் நூற்றாண்டில் மனித குலத்துக்கு எதிரான இனப்படு கொலைகள். இன சுத்திகரிப்புக்கள் மற்றும் மனித உரிமை மீறல்களைத் தடுக்கும் நோக்கத்துடன் 2006ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை என்ற தனிப் பிரிவு உருவாக்கப்பட்டது. அச் சபை நிறுவப்பட்டு 3 வருட காலங்களுக்குள்ளாகவே எமது மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். சாட்சிகள் இல்லாப் போரினை நிகழ்த்தி எமது அப்பாவி மக்கள் பலர் கொலை செய்யப்பட்டார்கள்.

இந்தப் போருக்கு ஊடகவியலாளர்கள் மற்றும் மனிதநேயப் பணியாளர்கள் எவருமே உள்ளே அனுமதிக்கப்படவில்லை. சாட்சியங்கள் இல்லாத நிலையில் அல்லது சாட்சியங்களை உள்விடாத நிலையில் இலங்கை அரசாங்கத்தின் பொய்யான பரப்புரைகள் மூலம் சர்வதேச சமூகம் இலங்கை அரசினால் தவறாக வழிநடத்தப்பட்டது. இவ்வாறான பொய்யும் புரட்டுமே இங்கு நடந்த இன அழிப்பை சர்வதேச சமூகம் தடுக்க முடியாமல் போனமைக்கு ஒரு காரணம். பொய்யையும் புரட்டையும் ஆயுதங்களாகக் கொண்டு ஒரு நாடு நீண்ட தூரம் பிரயாணம் செய்ய முடியாது. நடந்தது இனப்படுகொலை தான் என்பதற்கான ஏராளமான ஆதாரங்களும், சாட்சிகளும் இன்று சர்வதேச சமூகம் முன்பாக வைக்கப்பட்டுள்ளன. என்றோ ஒரு நாள் சர்வதேச சமூகம் தனது மனசாட்சிக் கண்களைத் திறக்கும், இந்த இனப்படுகொலைக்கு நீதி வழங்கும் என்ற எதிர்பார்ப்புடனேயே இந்த மண்ணில் பல்லாயிரக்கணக்கான மக்கள்பொறுமை காத்து நிற்கின்றனர். ஆனால் இன்று 9 வருடங்கள் கடந்துபோயுள்ள நிலையிலும் எமக்கான நீதி கிடைத்தபாடில்லை.

ருவாண்டா, பொஸ்னியா போன்ற நாடுகளை உதாரணம் காட்டி எமக்கான நீதி செயறபாடுகள் பல தசாப்தங்கள் செல்லலாம் என்று மக்கள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தி அரைகுறை தீர்வை திணிக்கும் முயற்சிகளில் சிலர் ஈடுபட்டுள்ளனர். ஆனால் ருவாண்டா, பொஸ்னியா ஆகிய நாடுகளில் இனப்படுகொலை இடம்பெற்ற காலமும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை இடம்பெற்ற காலமும் வேறுபட்டவை. முன்னைய இனப்படு கொலைகளில் இருந்து பாடம் கற்றுக்கொண்ட சர்வதேச சமூகம் இப்படியான கொடூரங்கள் இனிமேலும் எந்த நாட்டிலும் இடம்பெறக்கூடாது என்ற நோக்கில் பல்வேறு மனித உரிமைகள் பொறிமுறைகளை ஏற்படுத்திய பின்னரே முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை இடம்பெற்றது. ஆகவே சட்டங்கள் ஓரளவு வலுவாக இருந்த போதே இந்தப் பேரவலம் நடந்தேறியது.

இறைமையுள்ள ஒரு நாட்டில் மனித உரிமைகள் மீறப்படும்போது அவற்றைத் தடுத்து நிறுத்துவது இன்றுள்ள சர்வதேச சட்ட இணக்கங்களின் பிரகாரம் நியாயபூர்வமானது. ஒரு நாடு மனித உரிமை மீறல்களைச் சாதாரணமாக ஏற்றுக்கொள்வதும் அது தொடர்பில் சகிப்புத்தன்மையைக் காட்டுவதும் அல்லது பொறுப்புக்கூறலை ஏற்படுத்தாமல் விடுவதும் அந் நாட்டின் பொறுப்பற்ற தன்மையைச் சுட்டிக்காட்டுவதாக அமையும். அத்துடன் அவ்வாறான நடவடிக்கைகள்சர்வதேச சமூகத்தின் தார்மீகக் கடப்பாடுகளை அலட்சியம் செய்வதாகவே அர்த்தப்படும். தவறுகளை மொழுகிவிடும் இவ்வாறான செயல்கள் உலகம் முழுவதிலும் பெரும் மனிதப் பேரவலங்கள் நடைபெறவே வழிவகுக்கும். காலம் பிந்திய நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமனாகும்.

இன்று இந்த நாட்டில் கொலைக் குற்றம் புரிந்தவர்கள் கூட குற்றவாளிகளாகப் பார்க்கப்படுவதில்லை. அவர்களின் இனத்தைப் பொறுத்து வீரர்களாக்கப்படுகின்றார்கள். “எமது சிங்கள போர்வீரர் ஒருவரையேனும் சிறை செல்ல விடமாட்டேன்” என்று சமுதாயத்தின் உயரிய மட்டத்தில் இருப்போர் கூறும் போது ஒருவரின் குற்றம் அவரின் இனத்தைப் பொறுத்துத்தான் தீர்மானிக்கப்படுகிறதா என்ற கேள்வி எழுகின்றது.

சர்வதேசத்துக்கு முன்பாக ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை சபையில் தீர்மானம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கலப்பு விசாரணைப் பொறிமுறையை இலங்கை அரசானது இன்று மறுதலித்து நிற்கும் நிலையில் கடந்த 70 வருடங்களில் எவ்வாறு தமிழ் மக்களை தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் ஏமாற்றி இருப்பார்கள் என்பதை சர்வதேச சமூகம் இனிமேலாவது உணர்ந்துகொள்ள வேண்டும். இன்னமும் மகாவம்ச சிந்தனையில் திளைத்திருக்கும் சிங்கள அரசியல்வாதிகள் முள்ளிவாய்க்கால் இன அழிப்பை தமிழ்-சிங்களப் போராகவே கருதி தம் இனத்தின் வெற்றி என்ற மனோபாவத்தில்த்தான் இருந்து வருகின்றார்கள். ஒரு சிங்களப் போர் வீரன் தமிழ் மக்களுக்கு எதிராக எந்தக் குற்றத்தைப் புரிந்திருந்தாலும் அது குற்றமே அல்ல என்று வாதாடும் சிங்கள அரசியல் தலைமைகளே இன்று இந்த நாட்டில் காணப்படுகின்றார்கள்.

ஆகவே தொடர்ந்தும் கால நீடிப்புக்களை இலங்கை அரசாங்கத்துக்கு சர்வதேச சமூகம் வழங்கக்கூடாது. கடந்த ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைக் கூட்டத்தொடரில் ஆணையாளரால் கூறப்பட்டதை நினைவுபடுத்தி “இலங்கையில் பொறுப்புக் கூறலை ஏற்படுத்த உதவும் வகையில் உலகளாவிய விசாரணை அதிகாரத்தை பிரயோகிப்பது உட்பட ஏனைய வழிவகைகளையும் உறுப்பு நாடுகள் ஆராயவேண்டும்” என்று இந்த சந்தர்ப்பத்தில் அவருடன் சேர்ந்து சர்வதேச சமூகத்தை இத்தால் வேண்டி நிற்கின்றேன்.

எந்தவொரு நாடும் தனது குடிமக்களை வீதிக்கு விரட்டி அவர்களின் வாழ்விடங்களை அடாத்தாக பிடித்து வைத்திருப்பதில்லை. துரதிர்ஷ்டவசமாக இலங்கையின் வடக்கு கிழக்கில் அதுதான் நடைபெறுகின்றது. எம்மக்கள் இன்று வீதிகளில் இறங்கி வருடக்கணக்கில் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் வாழ்விடங்கள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு பௌத்த வணக்கஸ்தலங்கள், விவசாயங்கள், விவசாயப் பண்ணைகள், கடல் வளப் பண்ணைகள், உல்லாச விடுதிகள் போன்றவை அவர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

இராணுவத்தினரிடம் தமது உறவுகளை ஒப்படைத்து இன்றுவரை அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளும் வருடக்கணக்கில் இராணுவ முகாம்களுக்கு முன்னால் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அரசாங்கம் அதனைச் சட்டை செய்வதாகத் தெரியவில்லை.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் வருடக்கணக்கில் எவ்வித குற்றச்சாட்டுகளும் இன்றி தொடர்ந்து தடுப்பு முகாம்களில் வாடி வதங்கி வாழ்ந்து வருகின்றார்கள்.“கைவாங்குவோம்” என்ற தடைச் சட்டம் கால தாமதமாகியும் கைவாங்கப்படவில்லை.

வன்னி நிலப்பரப்பு அதி தீவிர சிங்கள மயமாக்கலுக்கு உட்பட்டுள்ளது. குறிப்பாக இந்த முல்லைத்தீவு மாவட்டத்தில் கடலும் தரையும் பாரிய படையினர் ஆக்கிரமிப்புக்குள்ளாகியுள்ளன.

ஆக்கிரமிக்கப்பட்ட சில இடங்களை விடுவிக்கும் நடவடிக்கைகளுக்குக் கூட மீள்குடியேற்றத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து இராணுவத்திற்குப் பெரும் தொகை நிதி வழங்கப்பட்டு வருகிறது. இதன் தாற்பரியம் எமக்கு விளங்கவில்லை. மீள் குடியேற்றத்திற்கு சர்வதேசத்தினராலும் அரசாங்கத்தினராலும் ஒதுக்கப்பட்ட நிதிகளை எவ்வாறு படைகள் எடுத்துச் செல்ல முடியும்? எமது மக்களின் அழைப்பின் பேரில் படைகள் இங்கு வரவில்லை. முகாமிட்டிருக்கவில்லை. போர் முடிந்ததும் உடனே வெளியேற வேண்டிய அவர்கள் எமது காணிகளை அடாத்தாகப் பிடித்து வைத்திருந்தார்கள். வளங்களை அவர்கள் சுகித்து வந்தார்கள். இப்பொழுது அவர்கள் எம் மண்ணை விட்டு வெளியே செல்ல எமக்கென ஒதுக்கப்பட்ட பணம் அவர்களுக்குக் கையளிக்கப்படுகின்றது. படைகளுக்குக் கொடுத்த பணம் எமது மக்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதி என்பதை அரசாங்கம் மறந்துவிட்டது. ஒருவேளை சர்வதேச நெருக்குதலுக்கு ஆளாகியிருக்கின்ற அரசாங்கத்தின் கோரிக்கைக்கு செவி சாய்க்க படையினர் மறுத்ததால் தான் அவர்களுக்கு எங்கள் பணத்தை இலஞ்சமாகக் கொடுத்து வெளியேற்றுகின்றார்களோ என்று நாம் எண்ண வேண்டியிருக்கின்றது. இதுவே இன்றைய வடக்கு- கிழக்கின் யதார்த்த நிலையாகும் .

இலங்கையின் கடந்த 70 வருட கால வரலாற்றைப் பார்க்கும் எவருக்குமே சர்வதேச தலையீடுகள் இல்லாமல், நெருக்குதல்கள் இல்லாமல் இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கிப் போவது என்பது இயலாத காரியம் என்பது புலப்படும். சர்வதேச அரங்கில் நெருக்குதல்களை உலக நாடுகள் எமது நாட்டுக்குக் கொடுக்க வேண்டும் என்று பகிரங்கமாக்வே இந்தத் தினத்தில் உலக நாடுகளை நோக்கி அறை கூவல் விடுகின்றேன். போர் முடிந்த பின் சமாதான காலத்தில் ஒரு இனத்தைத் தொடர்ந்து தமது ஆதிக்கத்தினுள் கட்டுப்பட வைத்து எமது தொடர் அரசாங்கங்கள் செயலாற்றி வருவதை உலக நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும்.

எனது அருமை மக்களே! நாம் தொடர்ந்தும் எடுத்தார் கைப்பிள்ளையாகச் செயற்படாமல் ஒரு நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாட்டினுடாக இனவழிப்புக்கான நீதிவேண்டியும் எமக்கான அரசியல் அபிலாசைகளை அடையும் முயற்சிகளை முன்னெடுத்தும் ஒன்றிணைந்து கொண்டுசெல்ல அணிதிரளுமாறு இன்றைய நாளில் உங்களை அழைக்கின்றேன். 21-ம் நூற்றாண்டின் நவநாகரிக மானிட யுகத்தில் இனவழிப்புக்குட்படுத்தப்பட்ட இனம் எமது இனம் என்பதை நாம் மனதில் நிறுத்துவோமாக!

இன்றைய தினம் ஒரு சில தீர்மானங்கள எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.

அவை யாவன ,

1)இவ் வருடத்தில் இருந்து ஒவ்வொரு மே 18-ம் நாளானது தமிழர் இனவழிப்பு நாளாகத்தொடர்ந்து எமது மக்களால் அங்கீகரிக்கப்பட்டு வர வேண்டும்.

2)சர்வதேச சமூகமானது விரைவாக இந்த இனவழிப்புக்கான சர்வதேச விசாரணை பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்ட காலதாமதம் இன்றி தலையிடவேண்டும்.

3)தொடர்ச்சியாக கட்டமைப்புசார் இனவழிப்பை சந்தித்து வரும் இனம் என்றவகையில் இவற்றைத் தடுக்கும் வகையில் எமக்கான தீர்வை இறைமை, தாயகம், தனித்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் பரிகார நீதியூடாகப்பெற்றுத்தர சர்வதேசம் முன்வர வேண்டும்.

4)முள்ளிவாய்க்கால் பேரவலம் இடம்பெற்று 9 வருடங்கள் கடந்துள்ள போதிலும் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களின் அவலங்கள் இன்னமும் தீர்க்கப்படாத நிலையில், போருக்கு பின்னரான இன்றைய அவலத்தை “பேரிடர் நிலைமையாக” Mass Disaster Situation எனக் கருதி அதற்கான கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களின் வாழ்க்கையை மீள் கட்டியெழுப்ப சர்வதேச சமூகம் தம்மாலான உதவிகள் சகலதையும் நேரடியாக வழங்க முன்வர வேண்டும்.

5)ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தாயக பிரதேசங்களிலிருந்து படையினர் முற்றாக வெளியேற்றப்படவேண்டும். எமது மக்களுக்கு சில நன்மைகளைப் பெற்றுக் கொடுத்து விட்டு தொடர்ந்து எமது பிரதேசங்களில் முகாமிட்டு இருக்கும் விதத்திலேயே படையினர் இன்று செயற்பட்டு வருகின்றனர். சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பதை எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

6)முள்ளிவாய்க்கால் அவலம் நடந்து அடுத்த வருடம் பத்து வருடங்கள் பூர்த்தி அடைகின்றன. தமிழ் மக்களின் ஒற்றுமையின் சின்னமாக, ஒருமித்த துக்க நாளாக மே 18ஐக் கணித்து வரும் வருடங்களில் தமிழர்தம் சகல நலவுரித்துக்களையும் ஒன்றிணைத்து, குழு அமைத்து இந் நினைவேந்தலை கட்சி பேதமின்றி, பிராந்தியப் பேதமின்றி கொண்டு நடத்த நாம் முன்வர வேண்டும்.

இன்றைய தினத்தில் ஒன்பது வருடங்களுக்கு முன் இதே மண்ணில் அநியாயமாகக் கொன்றொழிக்கப்பட்ட எமது உறவுகள் அனைவரதும் ஆத்மாக்கள் சாந்தியடைய வேண்டுமென்று பிரார்த்திப்போமாக! இங்கு வந்திருக்கும் அவர்களின் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை வெளிப்படுத்துவோமாக! எமது பிரார்த்தனைகளும் அனுதாப உணர்வுகளும் ஓரளவுக்கு உங்கள் சோகப்பட்ட உள்ளங்களை அமைதிப்படுத்துவன என்று எதிர்பார்க்கின்றோம் என தெரிவித்தார். (ம-4,9)

# கொல்லப்பட்ட மக்களை...

நேற்று கைத்தொழில் கண்காட்சி ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இன்றைய தினம் (நேற்று) மிகவும் முக்கியமான நாள். பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு, யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு இன்றைய நாளிலேயே நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டது.

இதற்காக அர்ப்பணிப்புக்களை செய்த முப்படையினர் உட்பட அனைவரும் நினைவுகூரப்பட வேண்டும். பயங்கரவாதம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து கொல்லப்பட்ட அப்பாவி மக்களையும் நினைவுகூர வேண்டும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (ம)

# மீண்டும் வருவான்...

அனுஷ்டிக்கப்பட்ட நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்ட தாயொருவரின் வீர பேச்சு அங்கு வந்திருந்த அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

குறித்த தாய் அங்கு கருத்து தெரிவிக்கும்போது,

எங்கள் அண்ணன் பிரபாகரன் மீண்டும் வருவார், அவரது பிள்ளைகள் அனைவரும் அணி அணியாய் திரண்டு வருவார்கள்.

நான் என்னுடைய மனச்சாட்சிக்குத் தவிர இலங்கையின் இராணுவத்தினருக்கும், பொலிஸுக்கும் பயப்படமாட்டேன்.

என்னுடைய ஒரே ஒரு பிள்ளை, யுத்தம் நிறுத்தப்பட்டதன் பின்னர் கொண்டு சென்றார்கள், இதுவரை விடுவிக்கப்படவில்லை.

இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட யாரும் இதுவரை திரும்பி வரவில்லை, ஆனால் எங்களுடைய அண்ணன் பிரபாகரன் மீண்டும் வருவார், அவரை இறைவனின் சக்தியும், நீதியின் சக்தியும் சேர்ந்து மீட்டு கொண்டு வரும்.

எங்கள் அண்ணன் வீறுநடைபோட்டு மீண்டும் வருவார், அவரின் பின்னால் எங்களது பிள்ளைகள் அணி அணியாய் திரண்டு வருவர். கடவுளால் பிரபாகரனுக்கு முடிசூட்டப்படும் என உறுதிக்குரலில் தெரிவித்துள்ளார். (ம)

# என்னை உங்கள்...

ருந்தன.

முள்ளிவாய்க்கால் நிகழ்வில் கலந்து கொண்ட தாயொருவர், எனது பிள்ளை, சுற்றத்தாரை இழந்து நான் தனித்துவிடப்பட்டுள்ளேன்.

எனக்கென்று ஒரு வீடு இல்லை, அரசியல்வாதிகள் வந்தார்கள் உங்களுக்கென்று ஒரு வீட்டுத்திட்டம் தருகின்றோம் என்று கூறினார்கள், வீட்டுத்திட்டமும் கிடைத்தது.

ஆனால் இந்த வீட்டுக்காக பெரும் கடன் பட்டுள்ளேன், வடமாகாண சபை அமைச்சர் அனந்தி சசிதரன் மாத்திரம் அமைச்சராவதற்கு முன்னர் எனது கடனை அடைக்க பணம் கொடுத்து உதவினார்.

ஆனால் எனது கடனை இன்னும் முழுமையாக அடைக்கமுடியவில்லை என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

அத்தருணத்தில் குறுக்கிட்ட ஒருவர் உங்களுக்கு எவ்வளவு கடன் இருக்கிறது அம்மா என்று கேள்வி எழுப்ப தான் இன்னும் வீட்டுத்திட்டத்திற்காக 15,000 ரூபாய் செலுத்த வேண்டும் என அந்த தாய் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு குறித்த நபர், உங்களுடைய பிள்ளையாய் என்னை நினைத்து இந்த பணத்தினை பெற்றுக்கொள்ளுங்கள் என 20, 000 ரூபா பணத்தினை அந்த தருணத்திலேயே எடுத்துக்கொடுத்து உதவியுள்ளார்.

என்னை உங்களுடைய பிள்ளையாய் நினைத்துக்கொள்ளுங்கள் என அந்த நபர் கூறிய தருணம், நான் உங்கள் அனைவரையும் என்னுடைய பிள்ளையாய்தான் நினைக்கின்றேன் என அந்த தாய் தெரிவித்தமை அங்குள்ள அனைவரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

மேலும், குறித்த நபரின் மனிதாபிமானம் அங்குள்ள மக்கள் அனைவரிடத்திலும் வரவேற்பைப் பெற்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில்லில் காற்றுப்...

விபத்துக்குள்ளாகியதில் முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் உயரிழந்தார். இந்த விபத்து நேற்று முற்பகல் 11.35 மணியளவில் இடம்பெற்றது.

கல்வித் திணைக்களத்தின் பிக்கப் வாகனத்தின் சில்லு ஒன்று காற்றுப் போனதால் கட்டுப்பாட்டையிழந்து தடம்புரண்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவால் இன்று நடத்தப்படவுள்ள முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கான கடமைக்கு உத்தியோகத்தர்கள் பயணித்த போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

அதில் பயணித்த நால்வர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் வேலணையைச் சொந்த இடமாகவும் யாழ்ப்பாணம், ஆத்திசூடி வீதியில் வசிப்பவருமான கோபாலபிள்ளை குகன் (வயது35) என்ற முகாமைத்துவ உதவியாளரே உயிரிழந்தார். சம்பவத்தில் காயமடைந்த மேலும் மூவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் பூநகரிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-9-15)

## கண்ணீரில் நனை...

தமிழ்த் தேசத்தின் துயர் நாளான முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் நேற்றைய தினம் உலகெங்கும் வாழும் தமிழர்களால் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், முள்ளிவாய்க்கால் மண்ணில் பிரதான நிகழ்வுகள் நேற்றைய தினம் நடைபெற்றிருந்தன. இந்த நினைவேந்தல் நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் ஒன்று திரண்டு கொல்லப்பட்ட உறவுகளுக்காக அஞ்சலி செலுத்தியிருந்தனர். நேற்றைய நிகழ்வில் முள்ளிவாய்க்கால் மண் கண்ணீரில் நனைந்தது.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் நேற்றைய நாளில் இலங்கை அரச படைகளால் வல்லாதிக்க நாடுகளின் உதவியுடன் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். பாதுகாப்பு வலயம் என அறிவித்து அதற்குள் மக்களை வரவழைத்து அதன் பின்னர் அந்த வலயத்திற்குள்ளும் குண்டு தாக்குதல்களை மேற்கொண்டு மக்களை கொன்றார்கள். இதேபோன்று பாடசாலைகளில் தஞ்சமடைந்த மக்கள், வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்ற மக்கள் என அனைத்து தரப்புக்கள் மீது வான்படை தாக்குதல் மேற்கொண்டது.

இறுதி கட்ட போரின் போது முள்ளிவாய்க்கால் கடற்கரையில் ஒரு சிறிய நிலப்பரப்புக்குள் பல லட்சம் மக்களை முடக்கி அதற்குள்ளும் தாக்குதல் மேற்கொண்டு இராணுவம் மக்களை ஈவிரக்கமின்றி கொன்றது. இந்த வலி சுமந்த நாளின் ஒன்பதாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்றைய தினம் தமிழர் தாயகம் எங்கும் பெருவாரியாக நடைபெற்றன. இதன் பிரதான நிகழ்வுகளாக முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டுள்ள தூபியடியில் நடைபெற்றன.

முன்னதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழக வாயிலிலிருந்து ஆயிரக்கணக்கான மோட்டார் சைக்கிள்களுடன் முள்ளிவாய்க்கால் நோக்கி புறப்பட்டு முற்பகல் 10.45 மணியளவில் முள்ளி வாய்க்காலில் நினைவு நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு வந்தடைந்தார்கள். அதனை தொடர்ந்து வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் நினைவு நிகழ்வு நடைபெறும் இடத்துக்கு வந்தடைந்தார். தொடர்ந்து வடக்கு மாகாண முதலமைச்சர் பிரதான சுடரை போரில் உறவுகளை இழந்த பெண் ஒருவரிடம் கையளித்தார்.

அதனை அந்த பெண்மணி ஏற்றி வைத்ததை தொடர்ந்து மணியோசை ஒலிக்கவிடப்பட்டது. இதன்போது ஆயிரக்கணக்கான தாய்மார்கள் கொல்லப்பட்ட தங்கள் பிள்ளைகளை நினைந்து உருகி ஒப்பாரி வைத்து அழுதார்கள். இதனால் முள்ளிவாய்க்கால் மண்ணே நேற்றைய தினம் சோகத்தில் ஆழ்ந்தது. பிரதான சுடர் ஏற்றி வைக்கப்பட்டதை தொடர்ந்து வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழிலும் ஆங்கிலத்திலும் முள்ளிவாய்க்கால் பிரகடனத்தை அறிவிப்பு செய்தார். இதனை அடுத்து பிரதான நினைவுச் சுடருக்கு பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

பொதுமக்களுடைய அஞ்சலிகளை தொடர்ந்து நிகழ்வுகள் யாவும் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டன. நினைவு நிகழ்வுகளில் கலந்து கொண்ட மக்களுக்கு மதிய உணவுகள் மற்றும் யுத்தத்தின் போது வழங்கப்பட்ட இலைக்கஞ்சி ஆகியன வழங்கப்பட்டன.

முள்ளிவாய்க்காலுக்கு செல்லும் பாதை எங்கும் தண்ணீர் பந்தல்கள் அமைத்து வர்த்தகர்களும், தனியார்களும் தாகம் தீர்த்து கொண்டிருந்தார்கள். இந்த நினைவு நிகழ்வுகளில் போது அரசியல்வாதிகள் எவரையும் நினைவஞ்சலி நடைபெறும் பிரதேசத்திற்குள் மாணவர்கள் அனுமதிக்கவில்லை. எனினும் ஒரு சிலர் அந்த ஒழுங்குகளை குழப்பும் வகையில் செயற்பட்டு கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

வழமையை விட இம்முறை மக்களை ஒழுங்குபடுத்தும் பணியில் பாடசாலை மாணவர்கள் ஈடுபடுத்தப்பட்டமையை அனைவரும் வரவேற்றிருந்தனர். மாணவர்கள் அனைவரும் மிக நேர்த்தியாக மக்களை ஒழுங்குபடுத்தி நினைவு நிகழ்வு நடைபெறும் இடத்தை கட்டுக்குள் வைத்திருந்தனர். இதேபோன்று யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் அனைத்து விதமான வினைத்திறன் மிக்க நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். இம்முறை வெயில் அதிகம் இல்லாமல் மழை பெய்யும் அறிகுறியுடன் காலநிலை இருந்தமையால் காலநிலையும் வாய்ப்பாக அமைந்திருந்தது.

கடந்த வருடங்களை பார்க்கிலும் இந்த வருடம் முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வுகளில் அதிகளவான மக்கள் ஈடுபட்டு கொண்டிருந்தமையை காண முடிந்தது. இந்த நினைவு நிகழ்வுகளில் சீருடை அணிந்த இராணுவத்தினரின் கெடுபிடிகள் காணப்படாத போதிலும், புலனாய்வு பிரிவினரின் தீவிர கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது. இது தவிர போக்குவரத்து பொலிஸாரின் நடவடிக்கையும் நினைவு நிகழ்வுகளுக்காக செல்லும் மக்களுக்கு இடையூறு வழங்கும் வகையில் அமைந்திருந்தது.

கடந்த எட்டு வருடங்களிலும் பார்க்க இம்முறை தமிழ் மக்கள் துணிவுடன் ஒன்று திரண்டு கொல்லப்பட்ட தங்கள் உறவுகளுக்காகவும், இறுதி போரில் நடைபெற்ற யுத்த மீறல்கள் கொலைகள் கடத்தல்கள் ஆகியவற்றுக்கு நீதி கோரியும் பொறுப்புக்கூறலை வலியுறுத்தியும், குற்றம் இழைத்தவர்களுக்கு நீதியை கோரியும் ஒன்று திரள ஆரம்பித்துவிட்டதனை காண முடிந்தது. இந்த ஒன்று திரள்வு அடுத்த வருடம் 10 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வின் போது பல இலட்சக்கணக்காக மாற்றமடைந்து நீதி கோரும் என்பதில் ஐயமில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-4)

## முள்ளிவாய்க்கால்...

நாட்டில் 30 வருடங்களாக ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்து ஒன்பது வருடங்கள் கடந்துள்ள நிலையில் இறுதி யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நேற்று முல்லைத்தீவின் முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு வீடு திரும்பும் மக்களுக்கு களைப்பை தீர்க்கும் முகமாக இராணுவத்தினர் மென்பானங்களை வழங்கி வழியனுப்பி வைத்த சம்பவம் ஒன்றும் பதிவாகியுள்ளது.

இவ்வாறு இராணுவத்தினரால் வழங்கப்பட்ட மென்பானங்களை மக்கள் பருகிச்சென்றதுடன் சிலர் புறக்கணித்தும் சென்றுள்ளனர்.

யுத்த வெற்றியை கொண்டாடும் முகமாகவா இவ்வாறு மென்பானங்கள் வழங்கப்படுகிறது என இராணுவத்தினரிடம் ஊடகவியலாளர்களால் வினவப்பட்டபோது,

நேற்றைய தினம் முல்லைத்தீவில் துக்கதினம் கடைப்பிடிக்கப்படுவதால் கடைகள் அனைத்தும் பூட்டியுள்ளன. நினைவேந்தலை கடைப்பிடிக்கும் மக்களுக்கு எமது ஆதரவை வழங்குகின்றோம்.

நிகழ்வுகளுக்காக பல்வேறு இடங்களிலிருந்தும் வந்துள்ளனர். அவர்களுக்கு செய்யப்படும் சிறிய உதவியாகவே இந்த நடவடிக்கையை மேற்கொள்கின்றோம். மற்றும்படி இதனை ஒரு யுத்த வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வாக ஒருபோதும் நாம் ஏற்பாடு செய்யவில்லை.

நாம் என்றும் விடுதலைப் புலிகளுக்கு மட்டுமே எதிரானவர்களேயன்றி மக்களுக்கு எதிராளிகள் இல்லை. இறந்துபோன மக்களின் உணர்வினை மதித்து இந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளோம் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9-312)


### பசு விற்பனைக்கு

20 நாள் நிரம்பிய நாம்பன் கன்றுடன் கலப்பின கறவைப்பசு ஒன்றும் 5 மாத கலப்பின சினைப்பசு ஒன்றும் வளர்ப்புக்கு விற்பனைக்கு உள்ளது.

077 756 0734

(C-2648)

### அல்மராய் நேர்முகத் தேர்வுக்கு தோற்றிய 9 பேரும் தெரிவாகினர்!

நீங்களும் இந்த அரிய வாய்ப்பைப் பெற!

**45,000 - 80,000/- உடன்**

மெக்கானிக், A/C டெக்னீஷியன், வெல்டர், வீட்டு & வாகன மின் இணைப்பாளர், பிளம்பர், விற்பனை உதவியாளர், சாரதிகள், தொழிலாளர்

வாகன சாரதிகளுக்கு வாசியான **வேலைவாய்ப்புக்கள்!**

| | | |
|---|---|---|
| மோட்டார் சைக்கிள் | டெலிவரி றைடேர்ஸ் | 63,000/- + |
| சிறிய ரக வாகனம் | டக்சி ட்றைவர் | 49,200/- + கமி |
| கன ரக வாகனம் | விற்பனை சாரதிகள் | 80,000/- + கமி |
| | ட்ரெய்லர் டிறைவர் | 70,000/- + OT |

அரச அங்கீகாரம் பெற்ற வடக்கின் ஒரே வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்

பதிவுகளுக்கு 0777 324 004

SIKARAM ACADEMY
Business - Hospitality - English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்
021 - 222 00 11
www.sikaram.lk

TGL SINCE 1990
Trans Gulf (Pvt) Ltd.,
90, First Floor, Chatham Street, Colombo 1
www.tgl.lk

### கறையான் தொல்லையா?



கட்டடங்களில் கறையான்களால் ஏற்படும் அல்லது ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்களை உத்தரவாதத்துடன் இல்லாதொழித்து தரப்படும்
(5 Years- 10 Years Warranty)
ஆலோசனையும் மதிப்பீடும் இலவசமாக வழங்கப்படும்.

தொடர்பு: ந.ரூபகாந்த் 0771515897, 0703312299, 0214993200

(4120)

### ஜேர்மன் சுவிஸ் மொழிகள்

Deutsch

திரு. R.மயூரன் ஆசிரியரால் A1 சான்றிதழுக்கு ஏற்றவாறு தமிழ் விளக்கத்துடன் கற்பிக்கப்படுகின்றன.

Note:- தனிப்பட்ட வகுப்புக்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

German Swiss Academy

மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (Near Rasi Collection) 077 645 4998
No:- 17A, கச்சாய் வீதி, சாவகச்சேரி. (Near New market)

(4123)

### ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

(4118)

### உடனடி வேலை வாய்ப்பு

முகாமையாளர்/நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்



வயது :-35 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - முகாமையாளர் 25000/-
நிர்வாக உத்தியோகத்தர் 15000/-

49A சப்பல்லேன்,யாழ்ப்பாணம். (யாழ் பொது நூலகம் முன்னால்) 0768226241

(சி-2558)

### அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

லண்டன், ஜேர்மனி, கனடா மற்றும் சில நாடுகளுக்கு விலை குறைக்கப்பட்டுள்ளது

வெளிநாடு,உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

021 221 5656 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவத்துறை | சாவகச்சேரி |
| கிளிநொச்சி | வவுனியா | கனகராயன்குளம் | முல்லைத்தீவு |

(C-2593)

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

0768226240

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
- நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-2538)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

தடுப்பூசி ஏற்றப்பட்ட "டாசோன்" ஆண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு

நாய்க்குட்டியின் விலை 7000 ரூபாய்

077 297 6255

(4126)

### விற்பனைக்கு

மீன்பிடி றோலருக்கான 30 அடி புதிய வள்ளம், யன்மார் 2 சிலிண்டர் (Full Recondition) எஞ்சினுடன் விற்பனைக்குண்டு.

வேம்படி வல்வெட்டித்துறை (3000)
தொடர்புகளுக்கு 077 357 3055

### Personal, Group Classes

இரசாயனவியல் (A/L) 2018, 2019,2020, Repeat Batch Past Papers செய்விக்கப்படும்.

சி.அங்கதன் (B.Sc [chem.spl])
தொடர்பு:- 077 920 8945

(3996)

### பழைய காலத்து வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி கோப்பாயில் அமைந்துள்ள பழைய காலத்து நாற்சார வீடு நிலை கதவுகளுடன் உடைத்து பொருட்களைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

(4121)
தொடர்புகளுக்கு 077 918 4050, 077 642 5049

### வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org